விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 08 செவ்வாய்க்கிழமை (22.06.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 185

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய மீது மக்கள் விடுதலை முன்னணி பாய்ச்சல்

### வரையறையை மீறிச் செயற்படுகிறாராம்

(கொழும்பு)

ஜே.வி.பியின் தலைவர் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்ட விஜயம் சம்பந்தமாகப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ள கருத்துக்கள் அமைச்சொன்றின் செயலாளர் ஒருவரின் கருத்துகளைப் போன்று அல்ல எனவும் அது அவர் தனது வரையறைகளை மீறிச் செயற்படும் நடவடிக்கை எனவும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித்த ஹேரத் கூறியுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ ஒரு அரச அதிகாரி. அவர் அண்மைக் காலமாக அரசியல் கட்சிகள் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பாகக் கருத்துக்கள் வெளியிட்டு வருகின்றார்.

பாதுகாப்புச் செயலாளராக மாத்திரமல்லாது அரசியல் அதிகாரி ஒருவரின் வரம்பை மீறி அவர் செயற்படுகின்றார்.

அரசாங்கம் வட பகுதியில் மேற்கொள்ளும் வேலைத் (18 ஆம் பக்கம் பார்க்க)

### அமைச்சர் டக்ளஸ் மீதான வழக்கு

## நான்கு வாரத்துக்குள் பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

(சென்னை)


அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதான வழக்கில் நான்கு வாரத்திற்குள் பதில் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்குச் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது சென்னையில் கொலை, மிரட்டல், கடத்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவற்றில் 1990 ஆம் ஆண்டு கைதான டக்ளஸ் தேவானந்தா பிணையில் விடுதலையானார்.

அதன் பிறகு இந்த வழக்குகளின் விசாரணைக்கு அவர் ஆஜராகவில்லை. இதனால் தேடப்படும் குற்றவாளியாகச் சென்னை நீதிமன்றம் அறிவித்தது.

இந்த நிலையில் கடந்த வாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் டக்ளஸ் தேவானந்தா இந்தியாவுக்குச் சென்றார். அப்போது சென்னையைச் சேர்ந்த சட்டத்தரணி புகழேந்தி உயர் நீதிமன்றில் (18 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் ஆயுதப் பயிற்சிகளைப் பெற்று கடல் வழியாக வந்து தாக்கக் கூடும்!



### படையினருக்குப் பாதுகாப்புச் செயலர் அறிவுறுத்தல்

(முல்லைத்தீவு)

**தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் வேறு நாடுகளிடம் இருந்து ஆயுதப் பயிற்சி பெற்று கடல் வழியாக இலங்கைக்கு வந்து தாக்குதல் நடத்தக் கூடும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அச்சம் வெளியிட்டுள்ளார். அவர் முல்லைத்தீவில் பாதுகாப்புப் படையினரின் முதலாவது பிராந்தியத் தலைமைக் காரியாலயத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய போதே இவ்வாறு கூறினார்.**

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு, தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பு மிகவும் பலமாகவேயுள்ளது. ஆனால் அவர்கள் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடக் கூடிய நிலையில் தற்போது இல்லை.

குறிப்பாகப் பிரித்தானியாவில் உள்ள உலகத் தமிழர் பேரவை, அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு செயற்பட்டு வரும் நாடு கடந்த தமிழீழ அரசு, நோர்வேயிலுள்ள தமிழ்க் குழுக்கள் புலிகளின் கொள்கையைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றன.

ஆகவே இராணுவம் மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் அரச படையின் ஒவ்வொரு (18 ஆம் பக்கம் பார்க்க)

## ஆலோசனைக் குழு நியமிப்பதில் ஐ.நா. செயலாளர் விடாப்பிடி!

### இன்று விபரம் அறிவிப்பார்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த வருடம் இடம்பெற்ற போர்க் குற்றம் தொடர்பில் தமக்கு ஆலோசனை வழங்கும் முகமாக ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூன் மூவரைக் கொண்ட நிபுணர் குழுவை இன்று அறிவிக்கவுள்ளார்.

பெரும்பாலும் இந்தக் குழுவில் இந்தோனேஷிய முன்னாள் சட்ட மாஅதிபரும், ஆஸ்திரிய ராஜதந்திரி ஒருவரும் உள்ளடங்குவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் குழுவின் சரியான வேலைத் திட்டங்கள், கடமைகள் என்னவென்பது இதுவரையில் வெளியாகவில்லை. எனினும் ராஜதந்திரத் தரப்புக்களின் தகவல்படி,

இந்தக் குழு போர்க் குற்ற விசாரணைகளுக்கு முன்னோடியாக அமைக்கப்படும் குழுவாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் கடந்த வருடம் இடம்பெற்ற யுத்தத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மதிப்பின்படி சுமார் 7 ஆயிரம் பொதுமக்கள் முதல் 4 மாதங்களில் கொல்லப்பட்டனர்.

அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளை வெற்றி கொண்டதாக அறிவிக்கப்படுவதற்கு முன்னரே இந்தத் தொகை மக்கள் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. (02 ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவின் வரலாறு நூலாக வெளியீடு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூல் நேற்று சம்பிரதாயபூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது. மகிந்த என்கின்ற இந்நூலை பிரபல எழுத்தாளர் முத்து பத்மகுமார ஆக்கியுள்ளார்.

நூல் வெளியீட்டு விழா கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக இலங்கையின் முதல் பெண்மணி சிராந்தி ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

அவர் நூலின் முதல் பிரதியை நூல் ஆசிரியரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

மகிந்தவின் பள்ளிப் பருவம் முதல் ஜனாதிபதி வரையாக அவர் மேற்கொண்ட பணிகள் அனைத்தும் இந் நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

NORTHANS ENTERPRISES

நொதன்ஸ் என்ரபிறைசஸ்

Authorized Distributors of Weerodara Exercise Books and all kinds of Stationeries

வீரோதாரா அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் காகிதாதிகளுக்கான உத்தரவு பெற்ற ஏக விநியோகஸ்தர்



T.P :- 0212240346
Fax :- 0212240346

Weerodara 1948
HS Book and Stationeries

பஸ் நிலையம் முன்பாக,
சுன்னாகம்
யாழ்ப்பாணம்.

(C-506)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



ஹற்றன் நஷனல் வங்கியின் 188ஆவது கிளை நேற்று திருநெல் வேலியில் திறந்து வைக்கப்பட்டது. இவ் திறப்பு விழா நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர், ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் ராஜேந்திரா தியாகராஜா ஆகியோர் வங்கிக் கிளையினை திறந்து வைப்பதையும், வாடிக்கையாளர்கள் வைப்புக்களை மேற்கொள்வதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- போட்டோ ரவி)*

## பிரபாகரனின் படத்தை வைத்திருந்த சிங்களப் பிரஜைக்கு விளக்க மறியல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் புகைப்படத்துடன் கைது செய்யப்பட்ட சிங்கள நபரை எதிர் வரும் 30ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்க வேண்டும் என்று புத்தளம் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் புகைப்படம் ஒன்றை ஆட்டோவில் கொண்டு சென்றபோது இந் நபர் வீதியில் சோதனைச் சாவடியில் நின்ற புத்தளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

எதிர்காலச் சந்ததியினருக்குக் காண்பிப்பதற்காகவே இப் புகைப்படத்தைப் பிரேம் செய்துதான் எடுத்துச்செல்வதாக அவர் பொலிஸ் விசாரணையின் போது கூறியிருக்கிறார்.

பொலிஸார் இவரை நேற்று மன்றில் ஆஜராக்கினர். இவர் சம்பந்தப்பட்ட புலனாய்வு விசாரணைகள் பூர்த்தியாகவில்லை என்று மன்றில் தெரிவித்தனர்.

இதையடுத்து நீதிவான் செசிரி ஹெரத் இந்நபரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

புத்தளத்தைச் சேர்ந்த அமரசிங்க சந் தன என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வராவார். (ச-5)

## விஞ்ஞானக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். விஞ்ஞான சங்கத்தின் ஏ பிரிவின் அனுசரணையுடன் பல்கலைக்கல்வியின் தரத்தை மேம்படுத்தல் எனும் கருப்பொருளிலான இலவச கருத்தரங்கு நாளை மாலை 3 மணிக்கு பௌதிகவியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. .

இதில் கருத்துரையை இலங்கை திறந்த பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் திருமதி உமா குமாரசுவாமி நிகழ்த்தவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரும் இதில் கலந்து கொள்ளுமாறு யாழ்.விஞ்ஞான சங்கத்தின் ஏ பிரிவின் செயலாளர் கலாநிதி கு.வேலாயுத மூர்த்தி கேட்டுக்கொள்கிறார். (ச-3)

## மாகாண சபையின் அதிகாரங்கள் எவை? இந்தியாவுக்கு விளக்கமளிக்க ஐ.தே.க. திட்டம்

இலங்கை அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தின்பிரகாரம்மாகாணசபைகளுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண் டிய அதிகாரங்கள் எவை? என்று விளக்கப் படுத்தி இந்தியாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க உள்ளது.

இதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் நாளை மறுதினம் 24ஆம் திகதி கண்டியில் கூடி மந்திராலோசனை நடத்த உள்ளார்கள்.

அவர்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு கட்டாயம் கிடைக்க வேண்டிய அதிகாரங்கள் குறித்து ஆராய்ந்து வரிவான அறிக்கை ஒன்றை தயாரித்து அந்த அறிக்கையை இந்தியாவின் வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் நிருபமா ராவிடம் கையளிக்க உள்ளார்கள்.

இதன் மூலம் 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் முழுமையான அமுலாக்கத்துக்கு இந்தியாவின் உதவி கிடைக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

மாகாண சபைகளுக்குநிதி, காணி, பொலிஸ் சம்பந்தப்பட்ட அதிகாரங்களை வழங்கவே மாட்டார் என அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாரதத் தரப்பிடம் தெரிவித்திருக்கின்றார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்நிலையிலேயே ஜனாதிபதியின் இத் திட்டத்தை முறியடிக்கும் நடவடிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சி இறங்கி உள்ளது என தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## பொறுப்பாசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஒலிம்பிக் விழாவில் வீதி ஓட்டம், சைக்கிள் ஓட்டம் ஆகியவற்றில் கலந்து கொள்ளும் மாணவர்களின் பொறுப்பாசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்றுகாலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இக்கலந் துரையாடலில் அனைத்துப் பொறுப் பாசிரியர்களை யும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச)


யா/மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை

நூற்றாண்டு 1910 – 2010
நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்

காலம் – 24.06.2010 (வியாழன்)
நேரம் – பி.ப. 3.00 மணி
இடம் – பாடசாலை திறந்த வெளி அரங்கு

**தலைமை**
திருமதி சிவமலர் அனந்தசயனன்
அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

**முதன்மை அதிதி**
பேராசிரியர் எஸ்.வி.டி.காமினி சமரநாயக்க
தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, இலங்கை

**சிறப்பு அதிதி**
திரு.பரமானந்தன் விக்னேஸ்வரன்
வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம்

**சிறப்பு பேச்சாளர்**
திரு. இராஜரட்ணம் செல்வஸ்கந்தன்
மகாஜனன் 1963 – 1976
சட்டத்தரணி

**கௌரவ அதிதி**
திரு.ஆறு.திருமுருகன்
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை
அதிபர், யா/ஸ்கந்தவரோதயக்கல்லூரி, சுன்னாகம்

**நினைவுப் பேருரை**
வைத்திய கலாநிதி தம்பிப்பிள்ளை பேரானந்தராஜா
மகாஜனன் 1975 – 1983
வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை

குறிப்பு:– நூற்றாண்டு விழாக் கலை நிகழ்வுகள் 25.06.2010 பி.ப.3.00 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். இந்த நிகழ்வில் நூற்றாண்டுப் பாடசாலைகளின் கலைச் சங்கமம் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை.

(C-504)


## வன்னி மக்களின் உணர்வுகளை யாழ்.மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்
## ஆனந்தசங்கரி வேண்டுகோள்

(கொழும்பு)

வன்னிமக்களின் உணர்வுகளை யாழ்.மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

யூன் மாதம் 22ஆம் திகதி தொடக்கம் 17 நாட்கள் நீடிக்கக் கூடியதாக மக்கள் களரி நாடகக் குழுவினர் நாடகக் கலைவிழா ஒன்றை ஆரம்பிக்க இருப்பது எனக்கு பெரும் ஆச்சரியத்தை தருகிறது. தம் உறவினர் இறந்த சோகமும் பல சொத்துக்களை இழந்த கவலையிலும் மூழ்கியிருக்கும் வன்னி மக்கள் தமக்கு ஏற்பட்டுள்ள அதிர்ச்சியிலிருந்து மீள முன்பு யாழ்.மக்கள் மகிழ்ச்சி ஆரவாரங்களில் ஈடுபடுவது வருந்தத்தக்க விடயமாகும்.

குழு அங்கத்தினர் சகல ஏற்பாடுகளையும் செய்துள்ள இவ்வேளை இதுபற்றி அவர்களுக்கு கூறியமைக்கு அவர்களிடம் மன்னிப்புக்கேட்கிறேன்.

ஒரு தடவை உறுப்பினர்கள் வன்னிக்குச் சென்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வீதிகளுக்கூடாகச் சென்று அங்கே ஏற்பட்டுள்ள பெரு அழிவுகளையும் இடம்பெயர்ந்து மீள்குடிய மர்ந்த மக்கள் ஒரு வருடத்தின் பின்பும் எத்தகைய பரிதாப நிலையில் இருக்கின்றனர் என்பதையும் பார்க்க வேண்டும்.

அவர்கள் மீளக் குடியமர்ந்தவர்களாக தெரியவில்லை. மீண்டும் இடம்பெயர்ந்தவர்களாகவே தெரிகின்றனர்.

வன்னி மக்களின் முகத்தில் ஒரு புன்சிரிப்பையும் காணமுடியாது. கடந்த வருடம் வீட்டை விட்டு தம் குடும்ப அங்கத்தவர்கள் சுமக்கக் கூடிய பொருள்களோடு சென்றவர்கள் இன்றுவரை ஒரு நாளேனும் நிம்மதியாக உறங்கியதில்லை. தம் வீடுகளுக்கு அவர்கள் வந்து பார்த்த போது வீடுகள் தரைமட்டமாகவும் சில பெரிய அளவில் தகர்க்கப்பட்டும் சில வீடுகள் கூரை இன்றி யன்னல்கள் இன்றியும் உள்ளன. அவர்களின் வீடுகளில் எந்த ஒரு பொருளும் இருக்கவில்லை என்றுள்ளது. (ச)


## தவறிவிட்டது

T.விஜயசந்திரா என்பவரது GL-0963 இலக்கமுடைய ஆட்டோவினது வாகன அனுமதிப் பத்திரம் மற்றும் ஆவணங்கள் 20.06.2010 (ஞாயிற்றுக்கிழமை) அன்று யா/மத்திய கல்லூரிக்கும் கஸ்தூரியார் வீதிக்குமிடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புக்கு:0770691667(ராசன்) (1748)


## ஆலோசனைக்குழு...

இதேவேளை இலங்கைக்குக் கடந்த வாரம் விஜயம் செய்திருந்த பான் கீ மூனின் அரசியல் துறை உதவிச் செயலாளர் லின் பெஸ்கோ குறித்த நிபுணர்குழு இலங்கை அரசாங்கத்திற்கும் உதவக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்திருந்தார்.

எனினும் இதனை நிராகரித்துள்ள இலங்கை அரசாங்கம் இந்தக் குழுவுடன் தாம் எந்தவொரு தொடர்பையும் பேணப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இந்த நிபுணர் குழு அமைப்புத் தொடர்பில் இலங்கையின் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இன்று அவசர கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (ச-3,5)

# இன்று ஒரு தகவல்

## ஏற்பது இகழ்ச்சி

ஒருநாள் நபிகள் நாயகத்திடம் ஓர் இளைஞன் வந்து நின்றான். அவன் ஆரோக்கியமாகத்தான் இருந்தான். இருந்தாலும் இவரிடம் பிச்சை கேட்டான்.

"உன்னுடைய வீட்டில் எதுவுமே இல்லையா?" என்று கேட்டார் இவர்.

"ஒரு ஒட்டகத் தோல் இருக்கிறது. அதை விரித்துப் போட்டு அதில் தான் படுக்கிறோம். ஒரேயொரு பாத்திரம் இருக்கிறது. தண்ணீர் குடிப்பதற்கு அதைத்தான் உபயோகப்படுத்துகிறோம். இந்த இரண்டும் தான் எங்களுடைய சொத்து" என்றான் அவன்.

நபிகள் நாயகம் பார்த்தார்.

"நீ உடனே வீட்டுக்குப் போய் அந்த இரண்டு பொருளையும் இங்கே எடுத்துக் கொண்டு வா" என்றார்.

இவன் உடனே வீட்டுக்குப் போய் அந்த இரண்டு பொருளையும் எடுத்துக் கொண்டு வந்தான்.

நபிகள் நாயகம் அங்கிருந்த அவருடைய தோழர்களைப் பார்த்து, "நீங்கள் யாராவது இதை விலைகொடுத்து வாங்குகிறீர்களா?" என்றார்.

உடனே ஒருத்தர் "நான் உரு திர்ஹம் (காசு) கொடுத்து வாங்குகிறேன்" என்றார்.

"வேறுயாராவது அதிக விலை கொடுக்க முடியுமா?" என்று கேட்டார்.

"நான் இரண்டு திர்ஹம் கொடுக்கிறேன்" என்றார் இன்னொருத்தர். உடனே அவரிடம் அந்தப் பொருட்களை விற்றார்.

அவர் கொடுத்த காசை வாங்கி இந்தப் பையனிடம் கொடுத்தார்.

"தம்பி! இப்ப உன்கையில் இரண்டு திர்ஹம் இருக்கிறது. இதில் ஒரு திர்ஹமை எடுத்துக் கொண்டு போய் ஏதாவது தானியம் வாங்கிக் கொள். அதைச் சமைத்து நீயும் உன் வீட்டில் உள்ளவர்களும் சாப்பிடுங்கள்.

இன்னொரு திர்ஹம் இருக்கல்லவா. அதற்கு ஒரு கோடரி வாங்கிக் கொண்டு என்னிடம் வா" என்றார்.

உடனே அவன் போனான். அவர் சொன்னது போலவே செய்தான்.

ஒரு கோடரியை வாங்கிக் கொண்டு இவரிடம் வந்து சேர்ந்தான். இவர் அந்தக் கோடரிக்கு காம்பொன்று தயாரித்துக் கொடுத்தார்.

"தம்பி! இதை நீ எடுத்துக் கொண்டு காட்டுக்குப் போ. காய்ந்த மரக்கிளைகளை வெட்டிக் கொண்டுவா, அதையெல்லாம் கடைத் தெருவுக்குக் கொண்டுபோய் விற்பனை செய். 15 நாள் கழித்து என்னிடம் வா. உனக்கு எவ்வளவு இலாபம் கிடைத்தது என்று சொல்" என்றார்.

இவன் சரியென்று சொல்லி விட்டுப் போனான் 15 நாட்கள் கழித்து வந்தான்.

முதல் தடவை அவன் இவரிடம் வந்ததற்கும் இப்பொழுது வருவதற்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. இப்பொழுது அவனுடைய முகத்தில் ஒரு தெளிவு இருந்தது.

அவன் மிகவும் மகிழ்ச்சியோடு பேசினான்.

"ஐயா! இந்த 15 நாட்களில் நான் 10 திர்ஹம் சம்பாதித்தேன். அதில் உடுப்பதற்கு ஆடையும் வாங்கிக் கொண்டேன். இப்ப நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். மற்றவர்களை நம்பிப் பிழைக்க வேண்டிய அவசியமேயில்லை" என்றான். இதைக் கேட்ட நபிகள் நாயகம்,

"நீ சொல்வதைக் கேட்கும் போது சந்தோஷமாக இருக்கிறது. எப்பொழுதும் முயற்சிக்குத் தகுந்த பலனை ஆண்டவன் கொடுக்கிறான் என்பதை மறந்து விடாதே. பிச்சை கேட்பவர்களை ஆண்டவன் விரும்புவதில்லை" என்று அந்த இளைஞனுக்கு உபதேசம் செய்தார்.

இது அவனுக்கு மட்டுமல்ல. உடலாரோக்கியமாக இருந்தும் பிச்சை எடுக்க நினைக்கும் எல்லோருக்கும் செய்த உபதேசம்.

பலபேர் உபதேசங்களைக் கேட்கிறார்கள். ஆனால் அதன்படி நடப்பதில்லை. அதனால் தான் வீணாகிப் போய்விடுகிறார்கள்.

ஒரு ஆர்மோனிய வித்துவான் இருந்தார். அவரிடமிருந்த குடிப்பழக்கம் காரணமாக பிச்சையெடுக்கும் அளவுக்கு வந்து விட்டார்.

ஒரு பெரியவர் இதைப் பார்த்தார்.

"இதோ பாருங்க... உங்களிடம் நல்ல சங்கீத ஞானம் இருக்கிறது. திறமை இருக்கிறது. அப்படி இருக்கும் போது ஏன் அநாவசியமாக பிச்சையெடுக்க வேண்டும்? இப்பொழுது நான் உங்களுக்கு அருமையான ?ஆர்மோனியம் வாங்கி பரிசாகத் தருகிறேன். அதை உபயோகப்படுத்தி இனிமேல் நீங்கள் சுயமாகச் சம்பாதித்து சாப்பிட வேண்டும்" என்றார்.

இவரும் நம்பிக்கையோடு "சரி" என்றார். அவரும் நல்ல ஆர்மோனியப் பெட்டியை வாங்கிக் கொடுத்தார். அதன் பின் "மூன்று மாதம் கழித்து மறுபடியும் என்னை வந்து பாருங்கள். நிலைமை எப்படி இருக்கிறது என்று சொல்லுங்கள்" என்றார்.

வித்துவான் மிகவும் பவ்வியமாக அதை வாங்கிக் கொண்டு போனார்.

அவர் சொன்னது போன்றே மூன்றுமாதம் கழித்து வெறுங்கையுடன் திரும்பி வந்தார். "இன்னொரு ஆர்மோனியப் பெட்டி வாங்கித் தந்தால் நல்லது போல் இருக்கு" என்றார்.

"ஏற்கனவே வாங்கிக் கொடுத்தது எங்கே?" என்று கேட்டார் இவர். "அது அடகுக் கடையில் இருக்குது" என்றார். இவர்களையெல்லாம் எப்படித் திருத்துவது?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் கவிதை , சித்திரப் போட்டிகள்

(அல்வாய்)

ஜி.ரி.இசற் சமூக இசைவுக்கான கல்விப் பிரிவினர்களுக்கூடாக வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் பன்மைத்துவ கலாசாரம்ஊடாக "சமாதானம்" என்னும்கருப்பொருளின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு சித்திரம், கவிதை ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

போட்டிகள் "சமாதானம்" என்னும் தலைப்பின் கீழ் அமைக்கப்பட வேண்டும் எனவும் சித்திரப் போட்டியின் பிரிவுகளாக தரம் 3,4,5 ஆகியன பிரிவு - I உம், தரம் 6, 7 பிரிவு II உம்,தரம் 8, 9 பிரிவு III தரம் 10, 11 பிரிவு IV உம், தரம் 12,13 பிரிவு V உம் ஆக வகைப் படுத்தப்பட்டுள்ளதுடன் கவிதைப் போட்டியின் பிரிவுகளாக தரம் 6,7 பிரிவு I உம், தரம் 8,9 பிரிவு II உம், தரம் 10, 11 பிரிவு III, தரம் 12,13 பிரிவு IV உம் ஆக பிரிக்கப்பட்டுள்ளதுடன் தரம் 11 , 13 ஆகியவற்றில் மீளக்கற் போர் போட்டிகளில் பங்கு பெற்ற முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல பாடசாலை அதிபர்களும் எதிர்வரும் 28 ஆம் திகதி பாடசாலை மட்டத்தில் போட்டிகளை நடத்தி மதிப்பீட்டு தெரிவு பட்டியலையும் முதலாம் இடத்தைப் பெற்று ஆக்கங்களையும் தத்தம் கோட்டக்கல்வி பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும் எனவும் கோட்ட மட்ட போட்டிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி நடத்தப்பட வேண்டும் எனவும் கோட்ட மட்டத்தில் மதிப்பீட்டு தெரிவுப்பட்டியலையும் முதலிடத்தைப் பெற்ற ஆக்கங்களையும் தத்தம் வலயக்கல்விப்ப ணிப்பாளர்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வலயமட்டப் போட்டிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி நடைபெறும் எனவும் அவற்றின் மதிப்பீட்டுத் தெரிவுப்பட்டியல் மற்றும் முதலிடம் பெற்ற ஆக்கங்களையும் வடமாகாண கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கு மாறும் கோட்டமட்டத்தில் முதல் 3 இடங்களை பெறுபவர்களுக்கு சான் றிதழ்களும் வலய , மாகாண மட் டங்களில் முதல் 3 இடங்களை பெறு பவர்களுக்கு சான்றிதழ்களும் பரி சில்களும் வழங்கப்படவுள்ளதாக வடமாகாண கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (6-4-19)

## சுகாதார அமைச்சில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

சுகாதார அமைச்சிலும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களிலும் சிறந்த முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தை ஏற்படுத்த எண்ணியுள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

அரச மருந்தாளர் சங்கத்தின் 44 ஆவது வருடாந்த கூட்டம் இலங்கை அஞ்சல் தலைமையக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இங்கு உரையாற்றிய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன சுகாதார அமைச்சுடன் தொடர்புடைய நிறுவனங்களின் நிர்வாகத்தை செயற்திறன் மிக்கதாக மாற்ற முடியும் என நம்பிக்கை வெளியிட்டார். சுகாதார அமைச்சிலும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களிலும் நீண்ட காலமாக சில பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன.


இந்த வெற்றிடங்களை 3 மாதங்களுக்குள் நிரப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்துப் பதவிகளுக்குமான வெற்றிடங்களை நிரப்புவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளி யிடப் பட்டுள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார். (6-4)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 155 பேர் கைது

செட்டிக்குளம் பொலிஸ் பிரிவிலுள்ள பல கிராமங்களில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வந்த 155 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட பதில் நீதவான் எம்.சிற்றம்பலம் முன்னிலையில் நேற்று முன்தினம் இவர்கள் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது சரீரப் பிணையில் செல்வதற்கான அனுமதியளிக்கப்பட்டது.அத்துடன் இவர்களை இன்று மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் பதில் நீதவான் எம். சிற்றம்பலம் உத்தரவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (6)



மானிப்பாய் அருள்மிகு மருதடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவ காலத்தை முன்னிட்டு நடைபெற்ற விசேட அபிஷேக ஆராதனையில் நல்லைக் குருமணியின் சிஷ்யன் கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா விநாயக புராணம் பற்றி இசைப்பேருரை நிகழ்த்துவதனைப் படத்தில் காணலாம்.

## இராசி பலன்


*22.06.2010*
*(ஆனி 8, செவ்வாய்க்கிழமை)*
*ஏகாதசி முன்னிரவு 6.47 மணிவரை*
*சுவாதி முன்னிரவு 8.48 மணிவரை*
*இராகுகாலம் 2.54-4.24 மணிவரை*
*சுபநேரம் 10.24-11.54 மணிவரை*
*ஏகாதசி விரதம்.*

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும் , தன வருவாய் , கீர்த்தி , குடும்ப சுகம். |
| இடபம் | தொழிலில் ஆர்வம் , முயற்சி கைகூடும் , மனமகிழ்ச்சி , இனிய செய்தி. |
| மிதுனம் | பணக்குறைவு , அஜீரணரோகம் , காரிய இடையூறு வியாபார நன்மை. |
| கடகம் | தன்னம்பிக்கைக் குறைவு , புதிய தகவல் , சுப செலவு , பிரயாணம். |
| சிங்கம் | இஷ்டசித்தி , தனதானியச் சேர்க்கை , சகோதரர் உதவி , கீர்த்தி. |
| கன்னி | நிலை மாற்றம் , மனோசங்கடம் , அதிக செலவு , முயற்சி தாமதம். |
| துலாம் | தொழில் மேன்மை , கற்பனை மிகுதி , உறவினர் சந்திப்பு , போசன சுகம். |
| விருச்சிகம் | சோம்பல் நிலை ,மனஸ்தாபம் , முயற்சி தாமதம் , பிரயாணம். |
| தனுசு | சயன சுகம் , கலந்துரையாடல் , எடுத்த காரியம் கைகூடும் , தனவருவாய். |
| மகரம் | பெரியோரால் மதிக்கப்படுதல் , இனிய தகவல் ,காரிய அனுகூலம் , ஆரோக்கியம். |
| கும்பம் | வேலைச் சுமை , எதிர்பாராத செலவு , உடல் நலக்குறைவு , புதிய முயற்சி. |
| மீனம் | ஆரோக்கியக் குறைவு , மனஸ்தாபம் , முயற்சி தாமதம் , போசன சுகம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 150 |
| தக்காளி | 160 | 170 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 |
| கோவா | 80 | 90 | 100 |
| கரட் | 200 | 180 | 200 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 110 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 70 |
| பாகற்காய் | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 60 |
| கரணைக் கிழங்கு | 60 | 70 | -- |
| பயிற்றங்காய் | 160 | 160 | 160 |
| லீக்ஸ் | 150 | 150 | 160 |
| பீற்றூட் | 100 | 100 | 150 |
| கறிமிளகாய் | 140 | 130 | -- |
| முருங்கைக்காய் | 350 | 400 | 350 |
| போஞ்சி | 120 | 130 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 50 |
| கீரை - 1 பிடி | 15 | 30 | 25 |
| தேசிக்காய் | 160 | 140 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 35 | 30 |



நல்லூர் சி.சி.ரி.எம். பாடசாலையில் நடைபெற்றுவரும் மக்கள் களரி நாடகவிழாவை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆரம்பித்து வைப்பதையும் நாடக நெறியாளர் பராக்கிரம நிரியெல்ல உரையாற்றுவதையும் நாடகக் காட்சிகளையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- என்.குமார்)

## அலங்கார உற்சவம்

தெல்லிப்பழை கிழக்கு திருவருள் மிகு குருநாத சுவாமி கோயில் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்ட அலங்கார உற்சவம் எதிர்வரும 29 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11தினங்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

இத்திருவிழாவில் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை தண்டிகைத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை அபிஷேகப் பூசையைத் தொடர்ந்து ஊஞ்சல், தீர்த்தவாரி உற்சவமும் இடம்பெறவுள்ளது. (6)

## சைவசமய அறிவுப் போட்டி

(இருபாலை)

கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்ட சைவசமய அறிவுப் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி மாலை 3 மணிக்கு ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்குரிய விண்ணப்பப் படிவங்களை ஆலய கர்மபீடத்தில் பெற்றுக்கொள்ளலாம் என ஆலய பரிபாலன சபை செயலாளர் தி.ரவீந்திரநாதன் தெரிவித்துள்ளார். (6-136)

## சிறுவர் முகாம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தால், நடத்தப்படவுள்ள, விசேட கல்விக்கான சிறுவர் முகாம் எதிர்வரும் 29 ஆம் திகதி சாவகச்சேரி சக்தி அம்மன் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

# பருத்தித்துறையில் இருந்து கொழும்புக்கு இன்று முதல் இரவு நேரப் பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் இருந்து கொழும்புக்கான இரவு நேர பேருந்து சேவை இன்று புதன்கிழமையிலிருந்து தினமும் மாலை 8.மணிக்கு பருத்தித்துறை பஸ்நிலையத்தில் இருந்து புறப்பட்டு கொடிகாமம்- புத்தளம் ஊடாக காலை 6 மணிக்கு கொழும்பு மத்திய பேருந்து நிலையத்தை அடைந்து அங்கிருந்து காலை 7.30 மணிக்கு வெள்ளவத்தை ஊடாக இரத்மலானையை சென்றடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் மாலை 6.30 மணிக்கு இரத்மலானையிலிருந்து வெள்ளவத்தை ஊடாக கொழும்பு மத்திய பேருந்து நிலையத்தை வந்தடைந்து அங்கிருந்து இரவு 9 மணிக்கு புறப்பட்டு புத்தளம் -கொடிகாமம் ஊடாக பருத்தித்துறைக்கு காலை 6.45 மணிக்கு வந்தடையும் என இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார் (6-4)

## அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம்



புலோலி மேற்கு சம்பந்தர் வளவைச் சேர்ந்த சம்பந்தர்-சிவராசசிங்கம் அகில இலங்கை சமாதான நீதவானாக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஜோய் மகிழ்மகாதேவா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார். இவர் முன்னாள் யாழ்.மாவட்ட தபால் அத்தியட்சகரும் யாழ்.மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் இணைப்பாளரும் புலோலி கந்தமுருகேசனார் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய முகாமையாளரும் ஆவார். (6-134)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடத்தும் விசேட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு 'டி' நடத்தும் உலக சுற்றாடல் தினத்தை ஒட்டிய விசேட கருத்தரங்கு நாளை புதன்கிழமை முற்பகல் 9.30 மணிமுதல் 12.30 மணி வரை யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் பிரிவின் தலைவர் எஸ். எஸ். உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் ''யாழ்ப்பாணக் குடாநாட்டில் சூழல் மாற்றமும் விவசாய அபிவிருத்தியில் அதன் தாக்கமும்'' என்னும் விடயம் பற்றி யாழ்.பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறைத் தலைவர் கலாநிதி கு.மிகுந்தன், ''யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுற்றுச்சூழல் பிரச்சினைகள்'' எனும் விடயம் பற்றி யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை விரிவுரையாளர் திருமதி விபுலன் பிரதீபா ஆகியோர் உரைநிகழ்த்தவுள்ளனர்.

மேலும் ''மாறிவரும் காலநிலையும் யாழ்ப்பாணக் குடாநாடும்'' ஒரு பார்வை எனும் விடயம் பற்றி யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரையாளர் நா.பிரதீபராஜா விரிவுரை நிகழ்த்தவுள்ளார். (6-4)





## யுனிசெப் நிலையறி மதிப்பீட்டு விடைத்தாள்களை ஒப்படைக்கவும்

(யாழ்ப்பாணம்)

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் தரம் 3 தொடக்கம் தரம் 9 வரையான வகுப்புகளுக்கு நடத்தப்பட்ட நிலையறி மதிப்பீட்டு விடைத்தாள்களை இதுவரை யாழ். வலயக் கோட்டங்களில் ஒப்படைக்காத பாடசாலைகள் இன்று காலை 9 மணிக்கு முன்னதாக தத்தமக்குரிய கோட்டக் கல்வி அலுவலகங்களில் தவறாது ஒப்படைக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (6)

# மறவன்புலோ, தனங்கிளப்பு பகுதி மக்களுடனான கலந்துரையாடல்

(தனங்கிளப்பு)



மறவன்புலோ, தனங்கிளப்பு பகுதிகளுக்கு நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா) கட்சியின் தலைவர் அ.வரதராஜப்பெருமாள் மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் தி.ஸ்ரீதரன், யாழ்.மாவட்ட அமைப்பாளர் க.மோகன், தென்மராட்சி அமைப்பாளர் சி.முரளி உள்ளிட்ட குழுவினர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்குள்ள மக்களிடம் கலந்துரையாடி அவர்களுடைய குறை நிறைகளைக் கேட்டறிந்தனர்.

மேலும் மறவன்புலோ மத்தி பாரதி சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்ட குழுவினரிடம் அங்குள்ள மக்கள் தங்களுடைய தேவைகளை எடுத்துக் கூறினர்.

இதன்பின்னர் தனங்கிளப்பு மணற்காட்டு முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற சந்திப்பில் அப்பிரதேச மக்களுடன் கலந்துரையாடினர்.

இக்குழுவில் இப் பிரதேசத்தில் சுவிஸ் அமைப்பினால் அமைக்கப்பட்டு வரும் வீட்டுத் திட்டங்கள் மற்றும் பாடசாலைகள் என்பவற்றைப பார்வையிட்டதுடன் யுத்தத்தினால் அழிவடைந்துள்ள ஆலயங்களைப் பார்வையிட்டார்கள். அத்துடன் இப்பகுதி வீதிகளைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தனர். தொடர்ந்து நடைபெற்று வரும் கேரதீவுப் பாலத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் நேரில் சென்று பார்வையிட்டனர். (4-37)

# கிணற்றில் தவறிவிழுந்த யுவதி வைத்தியசாலையில் அனுமதி

(கரவெட்டி)

இளம் யுவதி ஒருவர் தனது வீட்டுக் கிணற்றில் குளிக்கச் சென்ற சமயத்தில் தவறி கிணற்றில் விழுந்து படுகாயம் அடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 11 மணியளவில் நெல்லியடியில் இடம்பெற்றது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, இவ்விளம் யுவதி தனது வீட்டில் உள்ள கிணற்றில் குளித்துக்கொண்டிருந்த வேளை, கால்தவறி கிணற்றில் விழுந்தார். கரவெட்டி நெல்லியடியைச் சேர்ந்த கதிரவேலு மஞ்சுலிக்கா (வயது 21) என்ற இளம் யுவதியே படுகாயம் அடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவராவார். (6-24)

# எரிவாயு சிலிண்டர் வெடித்து படுகாயம்

(கரவெட்டி)

பருத்தித்துறைப் பகுதியிலுள்ள வேக் சொப் ஒன்றில் எரிவாயு சிலிண்டர் தவறுதலாக வெடித்ததில் அதன் உரிமையாளர் முகத்திலும் உடலிலும் எரிகாயங்களுடன் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த 19 ஆம் திகதி தனது வேக் சொப்பில் வேலை செய்த சமயம், காலை 11 மணியளவில் திடீரென்று தவறுதலாக எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சதீஸ்குமார் (வயது 30) என்ற குடும்பஸ்தரே எரிகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றார். (6-24)

# 27 ஆண்டுகளுக்குப்பின் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கான படகுப் போக்குவரத்து

## ஆய்வுப் பணிகள் ஆரம்பம்

(இராமேஸ்வரம்)

தமிழ்நாட்டில் இருந்து 27 ஆண்டுகளுக்கு பின்னர் இலங்கைக்கு படகு போக்குவரத்து ஆரம்பிக்கப் போகிறது. அதற்கான ஆய்வு பணிகளை மீன்வளத் துறை அதிகாரிகளும் தமிழ்நாடு கடல்சார் வாரிய அதிகாரிகளும் மேற்கொண்டுள்ளனர்.

இலங்கையில் போர் முடிந்து அமைதி நிலவுகிறது. இதைத் தொடர்ந்து புனரமைப்பு பணிகளை இலங்கை அரசு முடுக்கி விட்டுள்ளது. அந்த பணிகளுக்கு மத்திய அரசும் தமிழக அரசும் முழு அளவில் உதவி செய்து வருகின்றன. அதன் ஒரு கட்டமாக 27ஆண்டு களுக்கு முன் நிறுத்தப்பட்ட படகு போக்குவரத்து மீண்டும் ஆரம்பமாவுள்ளது.

சமீபத்தில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இது குறித்து ஆலோசனை நடத்தினார். அதன் தொடர்ச்சியாக படகு போக்கு வரத்துக்கான பணிகள் முழு வீச்சில் நடை பெற்று வருகின்றன. இதன் மூலமாக தமிழ கத்தில் உள்ள மத்திய மற்றும் ஏழை வர்க்கத் தினர் பெரிய அளவில் பலனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதலைப்புலி களுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையே போர் வெடித்ததால் கடந்த 1983 ஆம் ஆண்டில் தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையிலான படகு போக்குவரத்து நிறுத்தப்பட்டது. அப்போது 800 முதல் ஆயிரம் பேர் வரை தினமும் படகில் பயணம் செய்தனர்.

தற்போது 27 ஆண்டு களுக்கு பின் படகு போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது. இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னாருக்கு இடையிலும் தூத்துக்குடி மற்றும் கொழும்புக்கு இடையிலும் இரண்டு மார்க்கமாக படகு போக்குவரத்து ஆரம்பமாகவுள்ளது. நாகப்பட்டினத்தில் இருந்து கொழும்புக்கு பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதன் தொடர்ச்சியாக படகு போக்குவரத்து ஆரம்பிக்கவுள்ளது.

சென்னையை சேர்ந்த தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனத்தின் உதவியோடு ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வு பணிகளை தமிழ்நாடு கடல்சார் வாரியம் நடத்துகிறது. படகு போக்குவரத்து ஆரம்பிப்பதால் இரு நாடுகளுக்கும் வருமானம்அதிகரிப்பதுடன் தமிழ்நாட்டில் உள்ள ஏழை மற்றும் மத்திய தர வர்க்கத்தினர் பலனடைவார்கள் என தெரிவிக்கப்படுகிறது. அதுபோல இந்தியாவில் ஆன்மிக சுற்றுப்பயணம் செய்வதற்காக இலங்கை பயணிகள் அதிகமாக வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இராமேஸ்வரம்- கயா இடையிலான நேரடி ரயில் போக்குவரத்தும் அவர்களுக்கும் உதவியாக அமையும்.

இலங்கைக்கு படகு போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு மீன் ஏற்றுமதியாளர்கள். வர்த்தகர்கள் மற்றும் தென் தமிழ் நாட்டை சேர்ந்த வர்த்தக அமைப்புகள் வேண்டுகோள் விடுத்து வருகின்றன. முதல் கட்டமாக் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை படகு சேவையில் விடப்படும் பின்னர் தினமும் படகுகள் இயக்கப்படும். இவ்வாறு அந்த அதிகாரிகள் தெரிவித்தனர். (6-4)

## வணிக பாட விசேட செயலமர்வு

வணிகக் கல்வியும் கணக்கீடும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு எதிர்வரும் 29 ஆம் திகதி மற்றும் 30 ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இச்செயலமர்வினை தேசிய கல்வி நிறுவக செயற்திட்ட அதிகாரி எஸ்.கே. பிரபா கரன் நிகழ்த்துவதுடன் யாழ் மாவட்டத்தில் தரம் 10, 11 ஆம் வகுப்புக்களில் வணிகக் கல் வியும் கணக்கீடும் பாடத்தினை கற்பிக்கும் ஆசிரியர்கள் தேசிய கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்படவிருக்கும் இச்செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (6)

## கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

இருபாலை கோப்பாய் என்னும் முகவரியை சேர்ந்த கே. சிவகுமாரனின் மோட்டார் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக்காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். (4-6)

# பிரதேச செயலாளர்களின் சேவைக்காலத்தில் மாற்றம்

### பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

பிரதேச செயலாளர் ஒருவர் பிரதேசமொன்றில் சேவையாற்றும் கால எல்லையை ஐந்து வருடங்களாகக் குறைப்பதற்குப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு அமைய ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை பிரதேச செயலாளர்கள் வேறு பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்றும் சில பகுதிகளில் பிரதேச செயலாளர்கள் நீண்டகாலம் தொடர்ச்சியாகச் சேவையாற்றி வருவதாகவும் இதனால் இந்தப் பகுதிகளில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெறுவதாகக் கிடைத்துள்ள முறைப்பாடுகளை அடுத்தே பிரதேச செயலாளர்கள் ஒரே இடத்தில் சேவையாற்றுவதற்கான கால எல்லை குறைக்கப்பட்டுள்ளது என தெரியவருகிறது.

இந்த நடவடிக்கையால் பிரதேச நிர்வாகக் கட்டமைப்பு செயற்றிறன் மிக்கதாக அமையுமென அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளதோடு கிராம உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகளை விசேடமாக மேற்பார்வை செய்யவும் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# வடக்கு கிழக்கில் உள்ள கலாசாரச்சின்னங்களை வரைபடத்தில் குறிக்கும் நடவடிக்கை

வடக்கு கிழக்குப்பகுதிகளில் உள்ள கலாசார சின்னங்களை வரைபடத்தில் குறிப்பதற்கு யுனிஸ்கோ அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கலாசார சின்னங்களை வரைபடத்தில் குறிக்கும் பணிகள் இடம்பெற்று வருவதாக பேராதனைப்பல்கலைக் கழகத்தின் தொல்பொருள் பிரிவின் போராசிரியர் சுதர்சன செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தின் கலாசாரச் சின்னங்களை வரைபடத்தில் குறிக்கும் பணிகள் அடுத்த மாதம் அளவில் நிறைவு பெறும் எனவும் யுத்தம் நிறைவடைந்த நிலையில் வடக்கு-கிழக்குப்பகுதிகளில் உள்ள முக்கிய இடங்களை அடையாளம் காட்டுவதே இந்தத்திட்டத்தின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார். கலாசாரச்சின்னங்களை வரைபடத்தில் குறிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தியடைந் ததும் வடக்கு கிழக்கு மாகாணம் பற்றிய தக வல்கள் அடங்கிய நூல் ஒன்றை வெளியிடவும் யுனிஸ்கோ அமைப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

வடகிழக்கில் வாழும் மக்கள் அவர்களது கலாசாரம் , உணவு வகைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்த நூலில் உள்ளடக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யுனஸ்கோவின் இந்த நடவடிக்கை காரணமாகச் சுற்றுலாத்துறையில் அபிவிருத்தி ஏற்படும் என்றும் நம்பப்படுகிறது.

யுனஸ்கோ அமைப்பு அரசாங்கம் மற்றும் பிரதேச நிறுவனங்களுடன் கூட்டாக இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)


## யாழ்ப்பாண பல்கலைக்கழகம். இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
### வெளிவாரிப் பட்டப் படிப்பு பதிவு– 2009/2010

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் 2009/2010 கல்வியாண்டுக்கு பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாகப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடமிருந்து 31.08.2010 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கை நெறி
2. கலை முதற் கற்கை நெறி
3. பொது/ சிறப்பு கலைமாணி/ வணிகமாணி பகுதி – I
4. இசைமாணி/ நடனமாணி முதலாம் வருடம்
5. இசைமாணி/ நடனமாணி இரண்டாம் வருடம்
6. இசைமாணி/ நடனமாணி மூன்றாம், நான்காம் வருடம்

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி பகுதி – I கற்கை நெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம்.

இந்து நாகரீகம், வரலாறு, புவியியல், பொருளியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவநாகரீகம், மெய்யியல், அரசறிவியல்.

| கட்டணவிபரம் | ரூபா |
|---|---|
| விண்ணப்ப் படிவம் | 100.00 |
| பதிவுக் கட்டணம் | 1000.00 |
| பாடத்திட்டமும் விதி முறைகளும் | |
| கலைமுதற் தேர்வு | 250.00 |
| வணிகமாணி (4 வருடங்கள்) | 650.00 |


விண்ணப்ப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் உரிய தொகைகளைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து எமது அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட, உரிய தொகைக்கான காசுக்கட்டளை/தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 40.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், உதவிப்பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெளிவாரிப் பட்டப்படிப்பு பதிவு – 2009/2010" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்.
21.06.2010

(சி/502)





இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க சண்டிலிப்பாய்ப்பிரிவில் கணனிப்பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில்-நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளைத்தலைவர் பேராசிரியர் வி.க.கணேசலிங்கம் மற்றும் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க சண்டிலிப்பாய்ப் பிரிவின் செயலாளர் க.ரவிச்சந்திரன் ஆகியோர் மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி கௌரவிப்பதை படங்களில் காணலாம்.

# இதய தசை நோயின் வகைகள் மற்றும் அறிகுறிகள்

எந்த வகை இதய நோயும் பயமுறுத்தக் கூடியது தான். அது என்னவென்று தெரியா விட்டால் இன்னும் மோசம். (கார்டியோ மயோபதி இதய தசை நோயின் காரணங் கள், அறிகுறிகள், அறிவிப்புக்களை அறி ந்து கொள்வதால் உங்கள் இதய நோயைப் புரிந்து கொள்ளவும் சமாளிக்கவும் முடியும்.

**இதயதசை நோய்:**

*கார்டியோமயோபதி என்றால் என்ன?*

கார்டியோ என்றால் இதயம் மயோ என் றால் தசை பதி என்றால் நோய். இந்த நோயினால் இதய தசை பாதிக்கப்பட்டு வலு விழக்கிறது. வலுவிழந்த இதய தசை மெலி ந்து பெரிதாகலாம். முழு இதயதசையும் வலுவிழந்து இரத்தத்தைக் குறைந்த செயல் திறனுடன் பம்ப் செய்கிறது. இதயம் மெது வாக பம்ப் செய்ய முடியாத நிலையை அடை கிறது. உடலுக்குப் போதிய இரத்தத்தை அத னால் அனுப்ப முடியாது.

கார்டியோமயோபதி இருபாலினரையும் எல்லா வயதினரையும் தாக்குகிறது. பொது வாக இது நீண்ட நாள் (கிரோனிக்) நோய். நீங்கள் உங்கள் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். சிகிச்சை யினால் இந்நோய் அரிதாகக் குணமா கிறது. ஆனால் அறிகுறிகளைக் குறைக் கலாம்.

**இதய தசை நோயின் வகைகள்:**

இதய தசை நோயில் மூன்று வகை உண்டு.

1.விரிந்த இதய தசை நோய்
2.ஹைபர் டிராபிக் கார்டியோமயோபதி
3.ரெஸ்டிரிக்டிவ் கார்டியோமயோபதி

**விரிந்த இதய தசை நோய்.**
**(Diated Cardiomyopathy)**

விரிந்த இதய தசை நோய் மிக அதிக மாகக் காணப்படும் இதய தசை நோயாகும். இதனால் இதய தசை முழுவதும் வலு விழந்து குறைவாக இரத்தம் அனுப்பப்படுகி றது. பெண்களை விட ஆண்களுக்கு அதி கம் ஏற்படுகிறது. எல்லா வயதினருக்கும் ஏற்படலாம் என்றாலும் 30-50 வயதின ருக்கு அதிகமாக ஏற்படுகிறது. ஒன்றிலி ருந்து ஒன்றரை சதவிகிதத்தினருக்கு விரிந்த இதய தசை நோய் இருக்கிறது.

இதய தசை நோயுள்ள பெரும்பாலான வருக்கு இதய தமனி நோய்(இஸ்கிமிக் கார் டியோ மயோபதி இருக்கிறது. சமீபத்திய வைரஸ் தொற்றால் விரிந்த இதய தசை நோய் ஏற்படலாம் என்று ஆராய்ச்சியா ளர்கள் கருதுகின்றனர். ஜலதோஷம் அல் லது புளூவைப் போல் அது ஆரம்பிக்க லாம். ஆனால் இதயநோயாக பிறகு உரு வெடுக்கிறது. இந்த இதய நோயுள்ளவர் களில் ஐவரில் ஒருவரின் முன்னோருக்கு இந்நோய் இருந்தது தெரிய வருகிறது. எனவே இது பரம்பரையாகவும் வரலாம். இதய தசை நோயுள்ளவர்களில் பாதிப் பேருக்குக் காரணம் கண்டறிய முடியாது குடிப்பழக்கம், கருவுறுதல், விஷங்கள், குறைந்த போஷாக்கு, ஹார்மோன் கோளாறு, உயர் இரத்த அழுத்தத்தினால் இதய தசை நோய் உருவாகலாம்.

**உயர் இரத்த அழுத்த இதய தசை நோய்:**
**(Hyper Traffic Cardiomyopathy)**


அரிதாக ஏற்படும் இதய தசை நோயின் இவ்வகையில் இதயத்தால் ஓய்வெடுக்க, இரத்தத்தை நிரப்ப முடியாது. இது உயர் இரத்த அழுத்தத்துடன் தொடர்பு கொண் டிருக்கலாம். பொதுவாக பரம்பரையாக ஏற்படுகிறது. இதய தசையின் அளவு அதி கரித்து இதயத்தை விட்டு இரத்தம் வெளி யேறுவது தடைப்படுகிறது. இதய வரி, மூச்சுவிட சிரமம், மயக்கம், தலைசுற்றல் போன்றவை முக்கியமாக வேலை செய்தால் ஏற்படும்.

**கட்டுப்படுத்தப்பட்ட இதய தசை நோய்:**
**(Restrictive Cardiomypathy)**

இவ்வகை இதய தசை நோயும் அரிதாக ஏற்படுகிறது. இதய தசையால் இரத்தத்தை அனுப்ப முடியும். ஆனால் ஓய்வெடுத்து இரத்தத்தை நிரப்ப முடியாது. இதயத்தில் அதிக அழுத்தம் ஏற்படுகிறது. நீர்கோர்த்தல், வீக்கம் ( எடிமா) மயக்கம் போன்றவை ஏற் படலாம்.

**இதய தசை நோயின் முக்கிய அறிகுறிகள்:**

சில சமயம் இதய தசை நோயின் கார ணம் ஒன்றல்ல. பல. உதாரணமாக குடிப் பழக்கமும் அதிக இரத்த அழுத்தமும் இணை ந்து இந்நோயை உருவாக்கலாம். காரணங் கள் எதுவானாலும் இதய தசை நோயின் அறிகுறிகள் ஒன்றுதான். இந்த அறிகுறிகள் வெவ்வேறு அளவில் தென் படலாம். இவை



இதயம் சாதாரணமாக இரத்தத்தை அனுப்ப முடியாததால் ஏற்படுகின்றன.

இதய தசை நோய் மோசமானால் இதயம் செயலிழக்கப்பட்டு இதற்கான அறிகுறிகள் வேறுபடுகின்றன. சிலருக்கு அறிகுறிகள் தென்படாது. ஆனால் அசாதாரணமான (ECG) எலக்டிரோ கார்டியோகிராம் இருக் கும் மார்பு எக்ஸ்ரேயில் வீங்கிய இதயம் தென் படும். அறிகுறிகள் மோசமாவதற்கு பல வருடங்கள் முன்னரே சோர்வடைவது ஏற் படுகிறது. செயல்புரியும்போது பிறகு மூச்சு விடுவதில் சிரமம் ஆகியவை முக்கிய அறி குறியாகும். கணுக்கால்களில் வீக்கம், எடை அதிகரிப்பு போன்றவற்றால் மருத்துவரின் உதவியை நாட வேண்டிய அவசியம் ஏற் படும்.

**இதய தசை நோயின் மேலும் சில அறிகுறிகள்:**

மூச்சு விட சிரமம்
சோர்வு (ஃபெடிக்)
மார்பு வலி
எடை அதிகரிப்பு
வீக்கம் (எடிமா)
மயக்கம் , தலை சுற்றல்
விட்டு விட்டு இதயம் துடித்தல்

இந்த அறிகுறிகளின் காரணங்களைப் புரிந்து கொண்டால் சிகிச்சைத் திட்டத்தை உங்களால் புரிந்து கொள்ள முடியும். உங்கள் உடல் தனக்கே உரிய வழியில் நோயினால் பாதிக்கப்படுகிறது. இந்த நிலையில் மருத் துவரிடம் அறிகுறிகள் பற்றி விவாதிப்பதால் கட்டுப்படுத்தலாம். அறிகுறிகளில் மாற்றம் ஏற்படுவது நோய் குணமாவதை அல்லது மோசமாவதைக் காட்டும். எந்த மாற்றத்தை யும் மருத்துவரிடம் கூறுங்கள். சிகிச்சையில் மாற்றம் செய்ய அது உதவும்.

**இதய தசை நோய்க்கு சிகிச்சை**

இதய தசை நோய்க்கான பலவகையான சிகிச்சைகளை இந்தப் பகுதியில் காணலாம். இதய தசை நோய்க்கான காரணம் கண்ட றியப்பட்டால், அதை இலக்காக வைத்து சிகிச்சை தரப்படும். சிகிச்சை ஒவ்வொருவருக் கும் பிரத்தியோகமானது. எனவே இவற்றில் சில உங்களுக்குப் பொருந்தாது. சிகிச்சை யினால் இதயம் மறுபடி சாதாரணமாக இயங்க ஆரம்பித்து விடாது. சிகிச்சையின் முக்கியக் குறிக்கோள் இதயத்தை மேலும் திறனுடன் இயங்க வைப்பது தான்.

**சிகிச்சைத் திட்டத்தின் சுருக்கம்**

மேலான வாழ்க்கைத் தரத்தை அடைய வும் குறைவாக மருத்துவமனையை அணு கவும் உங்களுடைய மருத்துவருடன் இணைந்து செயல்புரிவது அவசியமாகும். உங்களை நீங்களே எப்படி பார்த்துக் கொள் வது என்று தெரிந்து கொண்டு சிகிச்சைத் திட்டத்தில் முழுமையாக ஈடுபடுங்கள். எப் போது மாற்றம் ஏற்படுகிறது என்று உங்கள் மருத்துவரிடம் சொல்லுங்கள் சரியான சம யத்தில் மருத்துவரைச் சந்தியுங்கள். சிகிச் சைத் திட்டத்தை ஒழுங்காகக் கடைபிடியுங் கள்.

**செயல்கள்**

முதலில் உங்கள் செயல்கள் குறைக்கப் படும். இதயத்தில் வைரஸ் தொற்று இருக்கும் வாய்ப்பு இருந்தால் சிறுது காலம் படுக் கையில் ஓய்வெடுக்க நேரிட லாம். படுக்கையின் தலைப் பாகம் உயர்த்தப்பட்டால் சுவா சிப்பது எளிது.

உங்கள் கால்களை அவ்வப் போது நகர்த்தி அவற்றிற்கு பயிற்சிதர வேண்டும். இதனால் இரத்தம் கால்களில் தங்காமல் தடுக்கப்படுகிறது. உங்கள் கால் விரல்களை கீழே வளைத்து பிறகு முழங்காலை நோக்கி பின் னால் வளைத்து பயிற்சி செய் யுங்கள். இது பெடலை அழுத்தி பின்னர் மேல் வர விடுவது போன்றது.

தலை சுற்றல் ஏற்படாமல் இருக்க உடல் நிலை மாற்றத் திற்கு உடலை தயாராக விடுங் கள் படுக்கையை விட்டு எழுந் திருக்கும் போது படுக்கையின் ஓரமாக அமர் ந்து எழுந்து நிற்கும் முன்பு சில நிமிடங்கள் ஓய்வெடுங்கள்.அதிகமாக உட்காா்வது பின்னா் நிற்பது போன்ற செயல்களைத் தவிர்த்து விடுங்கள்.

மருத்துவமனையை விட்டுச் செல்வதற்கு முன் என்ன செயல்களைச் செய்யலாம் என்று மருத்துவரிடம் கேளுங்கள். நடக்கும் தூரத்தை மெதுவாக அதிகரிக்கும் எளிய தினசரி உடற்பயிற்சிகள் அடங்கிய திட்டம் உங்களுக்குத் தரப்படும். உங்கள் இதயத் தையும் , தசைகளையும் வலுவாக்க சுறுசுறுப் பாக இருங்கள். உங்கள் செயல்களை மெது வாக அதிகரிக்கக் கற்றுக் கொள்ளு ங்கள். எந்தச் செயல்களைத் தவிர்ப்பது என்று தீர்மானிக்க மிகச் சிறந்த நபர் நீங்கள் தான்.

உங்கள் தொழில் மிகவும் கடினமாக இருந்தால் அதை விட வேண்டி இருக்கலாம். அல்லது மாற்ற வேண்டியிருக்கலாம். நீங் கள் குணமாகும் வரை தற்காலிகமாக ஓய்வு பெற வேண்டியது அவசியம். நீங்கள் மெது வாக செயல்பட ஆரம்பித்து பின்னர் உங்கள் தொழிலுக்கு முழு நேரமாகவோ பகுதி நேர மாகவே செல்லலாம். நீங்கள் எப்போது வேலைக்குத் திரும்பலாம் என்பதை உங்கள் இதயம் குணமடையும் விதமும் நீங்கள் எப்படி சிகிச்சைத் திட்டத்திற்கு ஒத்துழைக் கிறீர்கள் என்பது தீர்மானிக்கும்.

**களைப்பு அறிகுறிகள்**

உணர்வு சிக்கலும் உடல் சிரமமும் உங் கள் இதயத்திற்கு அதிக சிரமம் தருகின்றன. உங்கள் இதயம் அதிக வேலை செய்யத் தூண்டுபவை அதிக உணவு உண்பது, புகை பிடிப்பது, மனவருத்தம், குளிர்ந்த, வெப்ப மான, ஈரப்பதமான தட்ப வெப்ப நிலை, தூக்குவது, தள்ளுவது, இழுப்பது.

உங்கள் உடலுக்குத் தேவையான இரத் தத்தையும் பிராண வாயுவையும் உங்கள் இதயத்தால் தர முடியாவிட்டால் களைப்பின் அறிகுறிகள் ஏற்படும் இவை

மூச்சுத்திணறல், குமட்டல், வாந்தி, மார்புவலி, தலைசுற்றல், அதிக களைப்பு, சோர்வு, அதிக வேர்வை.

களைப்பின் அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக நிறுத்தி ஓய்வெடுங்கள். செயல் புரியும்போது மார்புவலி , (ஆன் ஜய்னா) ஏற்பட்டால், நைட்ரோ கிளிசரின் மாத்திரைகள் பரிந்துரைக்கப்பட்டிருந் தால், ஒரு மாத்திரையை நாக்கின் அடியில் வைக்கவும். ஐந்து நிமிடங்களில் வலி அடங்காவிட்டால், இன்னொரு மாத்திரை யை உபயோகிக்கவும். ஐந்து நிமிடங்கள் பொறுத்தபின்னர் மூன்றாவது மாத்தி ரையை உட்கொள்ளலாம். இதனால் உங்கள் மாா்பு வலி நிற்காவிட்டால் அல்லது வலி அதி கரித்தால் மருத்துவரை அழை யுங்கள். இதய தசையின் வேலையைக் குறைத்து, இதய தசைக்கு இரத்த ஓட்டத்தை அதிகரித்து நைட்ரோகிளிசரின் மார்பு வலி நிற்க உதவுகிறது.

**மற்ற அறிகுறிகளைச் சமாளிப்பது**

அதிகம் உண்ட பின்னா் குமட்டல், அழுத் தம் ஏற்பட்டால் குறைந்த அளவு உணவை அடிக்கடி உண்ணுங்கள். உங்கள் வயிற் றில் நீர் சோர்ந்து காரணமாக இருக்கலாம். குமட்டல், அழுத்தம் பற்றி மருத்துவரிடம் தெரிவியுங்கள்.ஏனெனில் அது வேறாகவும் இருக்கலாம்.

குறைந்த வேலை மற்றும் வயிற்றில் நீர் சேர்ந்ததால் மலச்சிக்கல் ஏற்படலாம். மலத்தை வெளியேற்ற சிரமப்படுவதால் இதயம் சிரமப்பட நேரிடுகிறது. மலமிளக் கிகள் தரப்படலாம்.

கால், பாதங்களில் வீக்கம் ஏற்பட்டால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு கால்களை உயர்த்துங்கள். வீங்கிய தசையினால் புண் கள் எளிதில் ஏற்படுகின்றன.

இப்பகுதியில் லோஷனைத் தடவி வறண்டு போகாமல் பார்த்துக் கொள்ளுங் கள். காயம் ஏற்படாமல் முடிந்தவரை பார்த்துக்கொள்ளுங்கள். காயம் ஏற்பட் டால் குறைந்த இரத்த ஓட்டத்தினால் மெது வாகத்தான் குணமாகும்.




இதய தசைநோயை, இதயம் செய லிழக்கும் அறிகுறிகளைக் குணப்படுத்த மற்ற மருந்துகள் உள்ளன. இங்கு குறிப் பிடப்பட்ட எல்லா மருந்துகளும் உங்களுக் குத் தரமாட்டார்கள். நீங்கள் உட்கொள் ளும் மருந்து பற்றிய விபரக் குறிப்புகள் உங்களுக்குத் தரப்படும். கீழ்க் கண்ட வற்றைத் தெரிந்துகொள்ளுங்க்ள.

**பெயர் அளவு கால அளவு குறிக்கோள்**

***மருந்துகளின் பக்க விளைவுகள்***

நர்ஸ் அல்லது மருந்து நிபுணர் உங் கள் கால அட்டவணையைத் தருவார். ஒவ் வொரு நாளும்குறிப்பிட்ட நேரத்தில் மருந் துகளை உட்கொள்ளுங்கள். சில வாசோ டைலேடர், ஆன்டி அரித்மிக் மருந்துக ளுக்கு ஒவ்வொரு 6,8 மணிநேரமும் ஒருமுறை தரப்படும். அலாரம் கடிகாரத்தை உபயோகித்து விழித்தெழுந்து இந்த மருந் துகளை உண்ண நேரிடும் . உங்கள் நேர அட்டவணை தயார் செய்வதற்குள் உங் கள் நர்ஸ் அல்லது மருந்து நிபுண ரிடம் நீங்கள் தூங்கும் நேரங்களைக் கூறி னால் அது கணக்கில் கொள்ளப்படும்.

டாக்டர் ஏ.ஜே.ராஜேந்திரன்
சென்னை

(ஆலோசனைகள் வரும்)

# அமைச்சுப் பதவிகளை வகிக்காத எம்.பிக்களுக்கு விசேட சலுகைககள்

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் அமைச்சுப் பதிவி வகிக்காத பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட உள்ளது.

அமைச்சுப் பதவிகளை வகிக்காத பாராளுமன்ற உறுப்பினர்களை அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற விவகார அமைச்சர் சுமேதா ஜயசேன தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு காரியாலங்கள், வாகனங்கள் வழங்கப்படவுள்ளதுடன் பணியாளர்களை நியமிக்கும் உரிமையும் வழங்கப்படவுள்ளதெனவும் அமைச்சு அல்லது பிரதி அமைச்சுப் பதவிகளை வகிக்காத பாராளுமன்ற உறுப்பினர்களை நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் செயற்பாட்டு ரீதியில் பங்களிப்புச் செய்யும் ஓர் முனைப்பாக இந்தச் சலுகைகள் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை தீர்வையற்ற வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக 60 பாராளுமன்ற உறுப்பினர்கள் தகுதி பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் மாகாணசபை அல்லது பாராளுமன்றில் அங்கம் வகித்து வாகனங்களைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு இந்தச் சலுகை மீளவும் அளிக்கப்படாது என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தீர்வையற்ற வாகனங்களைப் பெற்றுக் கொள்ளத் தகுதியுடையவர்கள் ஏற்கனவே விண்ணப்பித்துள்ளதாகவும் விரைவில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6-4)

# நாட்டில் நீர் வளத்தினை பாதுகாக்க அனைவரும் முன் வரவேண்டும்

## அமைச்சர் தினேஸ் குணவர்த்தன வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டில் உள்ள நீர் வளங்களை பாது காப்பதற்கு அனைவருமே முனைப்புக் களை மேற்கொள்ள வேண்டும் என நீர் வளத்துறை அமைச்சர் தினேஸ் குணவர்த் தன தெரிவித்துள்ளார். ஹோமாகம, வெலிய ஹேனவத்த பிரதேசத்தில் நீர் விநியோகத் திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைத்து உரை யாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

உலகளாவிய ரீதியில் தண்ணீருக்காக பெரும் பற்றாக்குறை நிலவும் பட்சத்தில் நாட்டில் உள்ள நீரியல் வளங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். தண்ணீருக்கான யுத்தங்களை மேற்கொள்ள வேண்டி காலம் வரக்கூடும் எனவும் ஆய்வாளர்கள் கூறி வருகின்றனர். எனவே தண்ணீருக்கான மோதல்களை மேற்கொள்ளாது தன்னிறைவுடைய நாடாக மாற்ற வேண்டியது அனைவரினதும் கடமை என அவர் குறிப்பிட்டுள்ளார். (6)


## இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

30ஆவது ஆண்டு நிறைவுவிழாவும் திறந்த பல்கலைக்கழக தினமும்

திகதி:- 2010 யூன் மாதம் 23 மற்றும் 24 ஆம் நாள்
இடம்:- இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், யாழ். பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.

**தலைவர்**
பேராசிரியர் உபாலி விதானபத்திரன (துணைவேந்தர், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்)

**பிரதம விருந்தினர்**
பேராசிரியர் உமா குமாரசுவாமி
(முன்னாள் துணைவேந்தர், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்)

**கௌரவ விருந்தினர்கள்**
பேராசிரியர் நா. சண்முகலிங்கன்
(துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
திரு.க.கணேஸ்
(அரசாங்க அதிபர், மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்)
திரு.வி.செல்வரட்ணம்
(மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,யாழ்ப்பாணம்)

**நிகழ்வுகளின் விபரம்**
**முதலாம் நாள் நிகழ்வுகள்**

| திகதி | நேரம் | நிகழ்வு |
|---|---|---|
| 23.06.2010 | 8.30-9.45 | விருந்தினர் வருகை<br>புதிய கட்டடம் திறந்து வைத்தல்<br>ஆரம்ப நாள் நிகழ்வுகள்<br>கல்விக்கண்காட்சியை திறந்து வைத்தல் |
| | 10.00-01.00 | ஊக்கலும் தலைமைத்துவமும்<br>டெங்கு நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவது எப்படி?<br>க.பொ.த.(உ/த)உயிரியல்/கணித பாடக் கருத்தரங்கு<br>க.பொ.த. (உ/த) இரசாயனவியல்/பௌதிகவியல் கருத்தரங்கு |
| | 2.00-3.00 | முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் மாணவரின் பெற்றோருக்குமான அமர்வு |
| | 3.00-4.00 | விசேட தேவையுடைய மாணவரின் பெற்றோருக்கான அமர்வு |
| | 4.00-5.00 | இலவசக்கல்வி பற்றிய வீதி நாடகம் |

* கல்விக் கண்காட்சி
* இலவச மருத்துவப் பரிசோதனை

3.00-5.00 சட்டக்கற்கைகள் தொடர்பான விசேட கருத்தரங்கு- யாழ். பிரதான வீதியில் உள்ள கலைத்தூது கலையக மண்டபத்தில் இடம்பெறும்.

**இரண்டாம் நாள் நிகழ்வுகள்**

24.06.2010 08.30-1.00 காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல் பற்றிய புதிர்ப்போட்டி
திறந்த -தொலைக்கல்வி பற்றிய சுவரொட்டிப் போட்டி
கணனியை அடிப்படையாகக் கொண்ட பாலம் வடிவமைக்கும் போட்டி

* கல்விக் கண்காட்சி
* இலவச மருத்துவப் பரிசோதனை

9.00-4.00 இலவச சட்ட உதவி முகாம் -யாழ். பிரதான வீதியில் உள்ள கலைத்தூது கலையக மண்டபத்தில் இடம்பெறும்.

மேற்படி இருநாள் நிகழ்வுகளிலும் கல்விக் கண்காட்சிகள் இலவச கல்வி ஆலோசனைகள் நடைபெறவுள்ளமையால் மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*அனைவரும் வருக! நிறை பயன் பெறுக!*

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்,
யாழ். பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

(இ)


# 22.06.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

* 1593 -குரொவெசியர்கள் சிகாக் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் துருக்கியர்களை வென்றனர்.
* 1633 -அண்டத்தின் மையம் பூமி அல்ல சூரியன் என்ற தனது அறிவியல் கொள்கையை கலிலியோ கலிலி ரோமின் அரசுப்படைகளின் வற்புறுத்தலின் பேரில் திரும்பப் பெற்றுக்கொண்டார்.
* 1783 -ஐஸ்லாந்தின் லாக்கி எரிமலையிலிருந்து வெளியேற்றிய நச்சு வளி பிரான்சின் ல ஹாவ்ரா நகரைத் தாக்கியது.
* 1812 - முதலாம் நெப்போலியன் ரஷ்யாவின் மீது போரை அறிவித்து முற்றுகையிட்டான்.
* 1815 - நெப்போலியன் பொனபார்ட் இரண்டாம் தடவையாக பதவியிழந்தான். 4 வயதான இரண்டாம் நெப்போலியன் இரண்டு வாரங்களுக்கு ஆட்சியில் அமர்ந்தான்.
* 1825 - பிரித்தானிய நாடாளுமன்றம் நிலமானிய முறையை நீக்கியது.
* 1848 - பாரிசில் தொழிலாளர்களின் ஜுன் நாட்களின் எழுச்சி ஆரம்பமாயிற்று ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.
* 1866 - ஆஸ்திரிய புருசிய போரில் ஆஸ்திரிய இராணுவம் இத்தாலிய இராணுவத்தைத் தோற்கடித்தது.
* 1893 - காம்பர்டவுன் என்ற ரோயல் கடற்படைக் கப்பல் ஒன்று விக்டோரியா என்ற பிரித்தானிய மத்தியதரைக் கடற்படைக் கப்பலுடன் மோதியதில் 358 மாலுமிகள் கொல்லப்பட்டனர்.
* 1898 -ஸ்பானிய அமெரிக்கப் போர் அமெரிக்கக் கடற்படையினர் கியூபாவில் தரையிறங்கினர்.
* 1911 - ஐந்தாம் ஜோர்ஜ் ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினான்.
* 1940 -இரண்டாம் உலகப்போர்: பிரான்ஸ் கட்டாயமாக நாசி ஜெர்மனியுடன் அமைதி உடன்பாட்டுக்கு ஒப்புக் கொண்டது.
* 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனிப் படையினர் சோவியத் ஒன்றியத்தை முற்றுகையிட்டனர்.
* 1941 -சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிரான லித்துவேனியாவின் விடுதலைப் போர் ஆரம்பமானது.
* 1962 -எயார் பிரான்சின் போயிங் விமானம் மேற்கிந்தியத் தீவுகளில் கௌதலூபே தீவில் விபத்துக்குள்ளாகியதில் 113 பேர் கொல்லப்பட்டனர்.
* 1976 -கனடாவில் மரணதண்டனை வழங்குவது நிறுத்தப்பட்டது.
* 1978 -புளூட்டோவின் சாரண் என்ற துணைக்கோள் கண்டுபிடிக்கப்பட்டது.
* 1986 - மெக்சிகோவில் இடம்பெற்ற உலகக்கோப்பை காற்பந்தாட்டப் போட்டியில் ஆர்ஜென்டீனிய வீரர் மரடோனா நூற்றாண்டுக்கான கோலைப் போட்டார்.
* 2002 - மேற்கு ஈரானில் இடம்பெற்ற 6.5 றிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 261 பேர் கொல்லப்பட்டனர்.

## பிறப்புகள்

* 1962 - க்ளைட் ட்ரெக்ஸ்லர் முன்னாள் அமெரிக்கக் கூடைப்பந்து வீரர்
* 1964 - டான் ப்ரவுன் ஆங்கில எழுத்தாளர்
* 1974 - விஜய் தென்னிந்திய நடிகர்

## இறப்புகள்

* 1990 - ஈலியா பிராங்க் நோபல் பரிசு பெற்ற ரஷ்ய இயற்பியலாளர் (பி.1908)

**1658 - போர்த்துகேயரிடம் இருந்து ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர்.**



# அலைகடல் நடுவிலிருந்து அருள்சுரக்கும் அன்னை



சக்தி பீடங்களில் வரலாற்றுச் சிறப்புப்பெற்று விளங்கும் ஆலயங்களில் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயம் நான்கு பக்கமும் கடலால் சூழப்பெற்ற அழகிய சிறிய தீவின் கண்ணே அமைந்துள்ளது.

அலைகடல் நடுவே இருந்து அடியார்களுக்கு கருணை மழை பொழிந்து கொண்டிருக்கிறாள் எம்தாய்.

அனலைதீவின் அயலில் ஒரு பகுதியாக அமைந்துள்ள புளியந்தீவில் நாகதம்பிரான் ஆலயம் அமைந்துள்ளது. அந்த ஆலயப் பகுதியில் இருந்து நாகபாம்புகள் கடல் வழியாகப் பூக்கள் கொண்டுவந்து அம்பாளைத் தரிசித்ததாக வரலாறு கூறுகின்றது.

நாகம் வந்து அம்பாளைப் பூசித்த காரணத்தால் நாகபூஷணி எனப்பெயர் வரக் காரணமாயிற்று. ஆலய வடக்குப்பக்கமாக வுள்ள கடல் பகுதியில் இரு பெரிய கற்கள் காணப்படுகின்றன. அதில் ஒரு கல் பாம்பு சுற்றிய கல் எனவும் மற்றைய கல் கருடன் கல் எனவும் கூறப்படுகிறது.

## அரச ஊழியர்கள் திருவிழா இன்று

நாகம் பூக் கொண்டுவரும் கருடன் இருந்த கல்லும் கருடனைக் கண்டு பாம்பு சுற்றிக்கொண்ட கல் எனவும் கூறப்படுகிறது.

அரச ஊழியர்களது 11ஆம் திருவிழாவின் போது; காலை 10 மணியளவில் இவ் அருட்சின்னங்களுக்கு விசேட பூசை நடைபெறுவது வழமை.

வி.இராசநாயகம்
உள நல மருத்துவப்பிரிவு
ஆதார வைத்தியசாலை
தெல்லிப்பழை

இவ்வேளை வானத்தின் மேலே கருடன் வட்டமிட்டுப்பறப்பது கடந்த சில வருடங்களாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

பகல் அம்பாள் வீதி உலா வரும்பொழுது ஆலய மூலஸ்தானப்பகுதியில் இருந்து வாயு பட்சணி நாகம் எடுத்துவரப்பட்டு அம்பாளுடன் சேர்ந்து வீதி உலா வரும். இம்முறையானது தொன்று தொட்டு நடைபெற்று வருகிறது.

இதன் பின்பு தீவுப்பகுதியைச் சூழவுள்ள கடல் பகுதிகள் அமைதி பெற்றுவிடும் கடல் கொந்தளிப்புகள் குறைவடைந்து காணப்படும். பக்தர்களின் பயணம் சுலபமடையும் . இது யாவரும் அறிந்த உண்மையாகும். இரவுப் பூந்தண்டிகைத் திருவிழாவும் சிறப்பாக நடைபெறும்.

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை திருவருள்மிகு சிவபூதவராயர் தேவஸ்தான பஞ்ச குண்ட பக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 6.24 மணிமுதல் 7.18 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு விநாயக வழிபாடும் யாகபூசையும் நடைபெற்று தொடர்ந்து காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணி வரை அடியவர்கள் எண்ணெய் காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறவுள்ளது.

நாளை புதன்கிழமை அதிகாலை 5 மணிக்கு விநாயக வழிபாடு, யாகபூசை, மகாபூர்ணாகுதி, அந்தர்பலி, பகிர்பலி, பரிவார ஸ்தூபி, கும்பசகிதம், பிரதான கும்பம், திருவீதி உலா வந்து மகா கும்பபிஷேகம் இடம்பெறவுள்ளதுடன் தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 108 சங்காபிஷேகம் இடம் பெறவுள்ளது. (6-4)



தென்னைச் செய்கையாளர்களுக்கு தென்னைமானிய [illegible]சோலை வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் வரவேற்புரை நிகழ்த்துவதையும் பெருந்தோட்ட அமைச்சர் மஹிந்த சமரசிங்க, பிரதியமைச்சர் சாளிந்த திஸாநாயக்க, பாதுகாப்புப்படை அதிகாரி, அமைச்சின் செயலாளர் திருமதி மாலினிபீரிஸ், யாழ்.அரச அதிபர் கே. கணேஸ், முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம் காணலாம்.

## திறந்த பல்கலைக்கழக தினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 30ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமை திறந்த பல்கலைக்கழகத் தினம். யாழ்.பிராந்திய நிலையத்தில் கொண்டாடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சட்டத்துறை சார்ந்த பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதில் நாளை புதன்கிழமை பி.ப.30 மணிமுதல் மாலை 5 மணி வரை சட்டத்துறை சார்ந்த விசேட கருத்தரங்கும் நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப. 9 மணி முதல் 4 மணி வரை இலவச சட்ட ஆலோசனை முகாமும் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்து. (6-4)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி பெருமாக்கடவை சீர்.மிகு.ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான இரதோற்சவம் பெருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையுடன் விநாயகப் பெருமான் எழுந்தருளி முற்பகல் 10 மணிக்கு இரதத்தில் ஆரோகணித்து வீதிவலம் வருதல் இடம்பெறவுள்ளது. (6)


## சிறைச்சாலை அதிகாரிகள் இடமாற்றம்

(கொழும்பு)

நாட்டின் பல சிறைச்சாலைகளின் உயர் பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. முக்கியமான 15 சிறைச்சாலைகளில் ஆணையாளர்கள் மற்றும் துணை ஆணையாளர்கள் இவ்வாறு மாற்றப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இரண்டாண்டுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படும் இடமாற்ற கோட்பாட்டுக்கு அமைவாகவே மேற்படி இடமாற்றங்கள் இடம்பெறவுள்ளன.

மாளிகா கந்த பிரதேசத்தில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் தப்பிச் சென்ற தொடர்பில் சிறைச்சாலை அதிகாரி கள் மீதுகடுமையான விமர்சனங்கள் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)




தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆனி உத்தர உற்சவத்தின் போது நடராஜப்பெருமான் வீதி உலா வரும் காட்சியைப் படத்தில் காணலாம்.

## 200 இலங்கையர் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா நோக்கிப்பயணம்

### அரசாங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

200 இலங்கையர்கள் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக அவுஸ்திரேலி யாவுக்குள் பிரவேசிக்க முயற்சித்து வருவதாக இலங்கை அரசாங்கம் அவுஸ்திரேலியாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறித்த நபர்கள் பல நாட்களாக பயணித்து வருவதாகவும் படகு ஒன்றின் மூலம் அவுஸ்திரேலியா நோக்கி பயணித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுவதுடன் இந்த விடயம் தொடர்பில் அவுஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் சேனக வெல்கம்பொல அந் நாட்டு அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் குறித்த கப்பல் பயணிகள் கனடா நோக்கிச்செல்ல முற்பட்டதாகவும் பின்னர் திட்டத்தை மாற்றி அவுஸ்திரேலியா நோக்கி முன்னகர்ந்து வருவதாகவும் குறிப்பிட்ட அவர் எவ்வாறெனினும் குறித்த கப்பல் பயணிகள் தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது குறித்து அவுஸ்திரேலியா இதுவரையில் தீர்மானிக்கவில்லை எனவும் அடிக்கடி சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க முயற்சிப்பதால் அந்நாட்டு அரசாங்கம் பெரும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-4)

## ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிக்கப்பட வேண்டுமானால் திருத்தம் அவசியம்

### ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிக்கப்பட வேண்டுமானால் அதன் அபரிமிதமான அதிகாரங்கள் குறைக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கும் நீதிமன்றத்திற்கும் கட்டுப்படும் விதத்திலான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தும் ஜாதிக ஹெல உறுமய அத்தோடு அரசியலமைப்பு திருத்தத்தின் போது அமைச்சரவையின் எண்ணிக்கை தொடர்பில் கொள்கையொன்று வரையறுக்கப்பட வேண்டுமென்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளரும் தேசிய அமைப்பாளருமான நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க மேலும் தெரிவிக்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஹெல உறுமய எதிர்க்கவில்லை.

ஆனால் அதன் பதவிக் காலம் நீடிக்கப் பட வேண்டுமென்கின்ற போது இப் பதவிக்குள்ள அபரிமிதமான அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும்.

அத்தோடு பாராளுமன்றத்திற்கும் நீதிமன்றத்திற்கும் கட்டுப்பட்ட பதவியாக ஜனாதிபதி பதவிக்கான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார். (6-4)

# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010


ஆசிரியர்:-வே. அன்பழகன்
(யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை)

## மாதிரி பரீட்சை–08
## வினாத்தாள் –I


நேரம்- 1 மணி 15 நிமிடம்

☛ 01 தொடக்கம் 38 வரையான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

✹ 01ஆம், 02ஆம் வினாக்களுக்கு ஒத்த இரண்டு படங்களையும் தெரிவு செய்க.


01. 

1) A, D  2) B, C  3) B, D

02. 

1) B, D  2) A, C  3) B, C


✹ வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

03. 

04. பிரதேசத்தில் பருமன் கூடியதிலிருந்து குறைந்தது வரை ஒழுங்குபடுத்தினால் நடுவில் வரும் சரியான விடை எது?
1) மாவட்டம்  2) கிராமம்  3) நாடு  4) மாகாணம்  5) நகரம்


05. அகரவரிசைப்படி ஒழுங்குபடுத்தினால் நடுவில் வரும் விடையைத் தெரிவு செய்க.
1) மாணவன்  2) மேகம்  3) மீனவன்  4) மொத்தம்  5) முயல்

✹ ஒரு கடதாசித் துண்டு படத்திலுள்ளவாறு மடிக்கப்பட்டு அதில் துளைகள் இடப்பட்டன. அதனை விரிக்கப்படும்போது தோன்றும் விதத்தைக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.


06. 

✹ 07ஆம் 08ஆம் வினாக்களுக்குக் கீழே தரப்பட்டுள்ள உருவை அவதானித்து விடையைத் தெரிவு செய்க.

07. அம்புக்குறி Bகாட்டும் திசை வழியே பார்க்கும்போது தோன்றும் உருவைத் தெரிவு செய்க.



08. அம்புக்குறி A காட்டும் திசை வழியே பார்க்கும்போது தோன்றும் உருவைத் தெரிவு செய்க.



✹ 09ஆம், 10ஆம் வினாக்களுக்கு வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

09. கடம் = 4 9 2 எனின் கடகம் = .........

| 4942 | 9424 | 4292 |
|---|---|---|
| 1) | 2) | 3) |

10. மருதம் = 5 7 8 3 எனின் தருமம் = .........

| 8357 | 8573 | 8753 |
|---|---|---|
| 1) | 2) | 3) |

✹ தரப்பட்ட பழக்கூட்டங்களின் விலைகளை அவதானித்து 11ஆம், 12ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.




| ரூபா. 40.00 | ரூபா. 50.00 | ரூபா. 30.00 |
|---|---|---|

11.மாம்பழம் ஒன்றின் விலை யாது?
1) ரூபா 5.00  2) ரூபா 15.00  3) ரூபா 10.00

12.பப்பாசிப் பழம் ஒன்றின் விலை யாது?
1) ரூபா 5.00  2) ரூபா 15.00  3) ரூபா 10.00

✹ கீழே தரப்பட்டுள்ள உருவை அவதானித்து 13 - 15 வரையான வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.




13. பிள்ளை பாடசாலைக்குச் செல்லவேண்டுமாயின் எத்தனை தடவைகள் இடது பக்கம் திரும்ப வேண்டும்?
1) 6  2) 7  3) 8

14. பிள்ளை பாடசாலைக்குச் செல்லவேண்டுமாயின் எத்தனை தடவைகள் வலது பக்கம் திரும்ப வேண்டும்?
1) 3  2) 4  3) 7

15. பிள்ளை பாடசாலைக்குச் செல்லவேண்டுமாயின் தெற்குத் திசையாக எத்தனை தடவைகள் செல்ல வேண்டும்?
1) 5  2) 3  3) 4

16. அருகில் அடைப்புக்களில் உள்ள வாக்கியங்களை வாசியுங்கள். நிகழ்ச்சிகள நடக்கின்ற வரிசைக் கிரமத்தைக் காட்டுகின்ற விடை எது?

1. இரண்டும் ஒன்றாக உணவைத் தேடிக் கொண்டுவந்து குஞ்சுகளுக்கு ஊட்டின.
2. ஆண்குருவி முயற்சி செய்து ஒரு கூட்டைக் கட்டியது.
3. பெண்குருவி முட்டைகளை அடைகாத்தது.
4. பெண்குருவி அங்கு பல முட்டைகளை இட்டது.
5. முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிவந்தன.
6. குஞ்சுகள் நன்றாக வளர்ந்து வந்தன

1) 4, 2, 3, 5, 6, 1  2) 2, 4, 3, 5, 1, 6  3) 2, 3, 4, 5, 6,1

17. ஒரு பிள்ளை காலையில் எழுந்து பாடசாலை செல்வதற்குப் புறப்படும் வரை செய்து முடிக்க வேண்டிய கருமங்கள் பல உள்ளன. அவற்றுள் முதலில் செய்ய வேண்டிய கருமமும் இறுதியில் செய்ய வேண்டிய கருமமும் கீழே தரப்பட்டுள்ளன.
இக்கருமங்களின் சரியான வரிசைக்கிரமத்தைக் காட்டுவதற்கு இரண்டாம், மூன்றாம், நான்காம் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான கருமங்களைக் காட்டும் விடை எது?

(A) நித்திரை விட்டெழுதல்  (B) ...............................  (C) ...............................
(D) ...............................  (E) வீட்டிலிருந்து புறப்படுதல்

1) (B) உடை அணிதல்  (C) முகம் கழுவுதல் (D) உணவு உண்ணல்
2) (B) உணவு உண்ணல் (C) முகம் கழுவுதல் (D) உடை அணிதல்
3) (B) முகம் கழுவுதல்  (C) உடை அணிதல்  (D) உணவு உண்ணல்

18. சுமன் படிப்பதில் எவ்வித ஆர்வமும் காட்டுவதில்லை. அவன் எந்நேரமும் விளையாட்டில் ஈடுபடுவான். தாயும் தந்தையும் பாடங்களைப் படிக்கும்படி எப்போதும் அறிவுரை கூறுவர். சுமன் சிறிதளவும் அவற்றைக் கேட்பதில்லை. சுமனின் பெற்றோர்களுடைய செயலை விபரிக்கும் மிகச் சிறந்த தொடர் பின்வருவனவற்றுள் எது?
1) அது குருடனுக்கு குருடன் வழிகாட்டியது போன்ற செயலாகும்.
2) அது செவிடன் காதில் ஊதிய சங்கு போன்ற செயலாகும்.
3) அது குளிக்கப் போய்ச் சேறு பூசியது போன்ற செயலாகும்.

19. 'முயற்கொம்பு தேடி அலைந்தது போல' என்பதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம் பின்வருவனவற்றுள் எது?
1) இல்லாத பொருளைத் தேடி அலைதல்
2) அலைந்து திரிந்து தேடிய பொருளைப் பெறுதல்
3) வழிதவறி நிற்பவனிடம் வழி கேட்டல்

20. 'நரி கோபமடைந்து ஆமை ஒன்றை நீரில் தள்ளி விட்டபோது ஆமை நீரில் அமிழ்ந்து இறந்து போனது' இவ்வாக்கியத்தின் கருத்துப் பிழையானது. வாக்கியத்தின் கருத்துப் பிழையாவதற்குக் காரணமான விடயம் எது?
1) ஆமைக்கு நரியைச் சந்திக்க வாய்ப்புக் கிடைப்பதில்லை
2) நரியைக் கண்டவுடன் ஆமை பயப்படுவதற்குக் காரணம் எதுவுமில்லை.
3) ஆமை நீரில் அமிழ்ந்து இறப்பதற்கு இடமில்லை.

✹ **பின்வரும் பந்தியை வாசித்து 21ஆம், 22ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

இப்போது கேட்பது இரண்டாவது வெடியின் சத்தமாகும். வெடிச்சத்தம் எந்தத் திசையிலிருந்து வந்ததென எனக்கு அறிந்துகொள்ள முடியவில்லை. நான் தந்தையிடமிருந்து பிரிந்து ஓடிவந்து இங்கு ஒளிந்துள்ளேன். எனது முன்னங்கால் ஒன்று காயப்பட்டு இரத்தம் பாய்கிறது. தந்தைக்கு என்ன நடந்ததென எனக்குத் தெரியாது. தந்தைக்கு வெடி பட்டதா? தந்தை வெடித்தாக்குதலால் இறந்து விட்டாரா? எனக்கு அறிந்துகொள்ள முடியவில்லை. எனது இதயம் படபடக்கிறது. எனது முழு உடம்பும் நடுங்குகிறது. கண்களிலிருந்து கண்ணீர் பெருகுகின்றது. நாங்கள் எப்பொழுதும் பயத்துடனேயே வாழ்கிறோம். காட்டில் உலாவித் திரியும் முறை பற்றியும், பகைவர்களிடமிருந்து தப்பும் முறை பற்றியும் தந்தை எப்போதும் எனக்குச் சொல்லித் தந்துள்ளார். இருந்தும் இன்று தந்தை பகைவரின் வெடிக்கு இரையாகி விட்டார்.

21. இங்கு கூறப்படுவது
1) அநாதையான பிள்ளையின் சிந்தனை
2) ஆபத்துக்குள்ளான பிராணியின் சிந்தனை
3) வேட்டைக்குச் சென்ற பிள்ளையின் சிந்தனை

22. இங்கு தரப்பட்டுள்ள விபரங்களின்படி இந்நிகழ்ச்சி நடைபெற்றது?
1) காலையில் எனக் கூறலாம்
2) மாலையில் எனக் கூறலாம்
3) நாளில் எந்த நேரத்தில் என்று கூறமுடியாது.

23. விமலா காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது அவளது நிழல் அவளது வலக்கைப் பக்கத்தில் விழுவதைக் காணக்கூடியதாக இருந்தது. அவ்வாறெனில் அவள் எத்திசையை நோக்கிச் சென்றாள்?
1) வடக்கு 2) மேற்கு 3) தெற்கு

24. குமார் தனது 10வது பிறந்த நாளை இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டாடினான். அன்று லலிதாவின் வயது 4 ஆண்டுகளாக இருந்தது. இதற்கேற்பக் குமாரினதும் லலிதாவினதும் வயதுகள் தொடர்பான சரியான கூற்று யாது?
1) இன்று குமாரின் வயது லலிதாவின் வயதின் இரு மடங்காகும்.
2) இன்று குமார் லலிதாவிலும் இரு ஆண்டுகளினால் மூத்தவன்
3) இன்னும் 5 ஆண்டுகளில் லலிதாவின் வயது 10 ஆண்டுகளாகும்.


✹ **கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களினதும் எழுத்துக்களினதும் நிரையை வாசியுங்கள். இதனைக் கொண்டு 25ஆம், 26ஆம், 27ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.**

5 5 K 6 6 J K K 5 S J 5 8 J 8 J R R 6 5 K R K 5 J J 6 S S 6 J J J

25. இலக்கங்களும் எழுத்துக்களும் உள்ள இந்நிரையில் எத்தனை **J** எழுத்துக்கள் உள்ளன?
1) 10 2) 9 3) 8

26. இங்கு மிகக் குறைவாகக் காணப்படுவது எது?
1) இலக்கம் 8 2) எழுத்து **K** 3) எழுத்து **R**


27. இங்கு ஒரு இலக்கத்திற்கு முன்னும் பின்னும் ஒரே வகை எழுத்து காணப்படுகிறது. அந்த எழுத்து யாது?
1) எழுத்து **J** 2) எழுத்து **K** 3) எழுத்து **R**

✹ 

**சதுரமுகியொன்றின் படம் கீழே தரப்பட்டுள்ளது. அதன்படி வெளிப்பக்கத்துக்கு மை பூசப்பட்டு கோடுகளின் வழியே துண்டுகளாக வெட்டப்பட்டுள்ளது.**

28. இங்கு ஒரு பக்கத்துக்கு மட்டும் மை பூசப்பட்ட எத்தனை துண்டுகள் இருக்கும்?
1) 6 2) 1 3) 3

✹ **ஒரே நேரத்தில் ஓட்டப் போட்டியொன்றை ஆரம்பித்த நான்கு பிள்ளைகள் போட்டியை நிறைவு செய்த நேரங்கள் முகம்பார்க்கும் கண்ணாடியொன்றில் பின்வருமாறு தென்பட்டது.**




29. போட்டியில் 1, 2, 3, 4 ஆம் இடங்களைப் பெற்றுக் கொண்டவர்களின் பெயர்கள் முறையே,


| 1) | 2) | 3) |
|---|---|---|
| சுனில் | கரீம் | கரீம் |
| சமன் | ராஜா | சமன் |
| ராஜா | சமன் | ராஜா |
| கரீம் | சுனில் | சுனில் |

✹ **கீழுள்ள குறிப்பை வாசித்து 30ஆம், 31ஆம் வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிவு செய்க.**

**AE** பெண்பிள்ளைகளாகும். **A** மரக்கறி மட்டும் உள்ள உணவு சாப்பிடுவதுடன் **E** மரக்கறியும், இறைச்சியும் உள்ள எவ்வகையான உணவையும் சாப்பிடும். **B,C, D** ஆண்பிள்ளைகள் என்பதுடன். **D** மரக்கறி மட்டும் சாப்பிடும். **B**யும், **C**யும் இறைச்சி, மீன் மட்டும் சாப்பிடும்.


30. இதன்படி **A** யுடன் உணவு உண்ணும் குழுவுக்குச் சேர்க்கக் கூடியவர்களாவது,
1) **A,E, B** 2) **A, D, E** 3) **A, C, E**

31. **B** யும் **C** யும் உண்ணும் உணவுக்கேற்ப அவர்களது குழுவில் சேர்க்க முடியாதவர்களாவது,
1) **A, D** 2) **E, A** 3) **D, E**

32. 

இவ்வுருவில் **B,C,D** யினால் காட்டப்பட்டுள்ளதாவது,
1) மரக்கறி, பழங்கள், போஞ்சி 2) போஞ்சி, புடோல், பாகல்
3) மரக்கறி, போஞ்சி, பாகல்

33. இவ்வுருவில் அம்புக்குறியால் காட்டப்பட்டுள்ள பகுதியால் பார்க்கும்போது காணக்கூடிய உருவமாவது,




1) 2) 3)


34. நிர்மலாவின் அக்கா ரேணுகா, ரேணுகாவின் அக்கா கோகிலா,மாதவியின் தங்கை கோகிலா, கோகிலாவுக்கு மூத்தவர்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள்?
1) ஒருவர் 2) இருவர் 3) மூவர்

35. 5 மீற்றர் நீளமும் 4 மீற்றர் அகலமும் கொண்ட ஒரு காணியைச் சுற்றி ஒவ்வொரு மீற்றருக்கும் ஒவ்வொரு மரம் நடப்பட்டது. நடப்பட்ட மரங்களின் எண்ணிக்கை யாது?
1)18 2) 20 3) 22

36. பழ வியாபாரி ஒருவர் மூன்று நாட்களில் 70 மாம்பழங்கள் விற்றார். முதல் நாள் விற்றதன் அரைவாசி இரண்டாம் நாள் விற்றார் மூன்றாம் நாள் 10 பழங்கள் விற்றார். அப்படியாயின் முதல் நாள் விற்ற மாம்பழங்களின எண்ணிக்கை யாது?
1) 20 2) 40 3) 30


✹ **37ஆம், 38ஆம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்ட படத்துடன் நெருங்கிய தொடர்புடைய படத்தினைத் தெரிவு செய்க.**

37.  1)  2)  3)  4) 


38.  1)  2)  3)  4) 

☛ **39ஆம், 40ஆம் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

✹ **வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணை எழுதுக.**

39. 


(......................)

40. 


(......................)

# நிவாரணக் கிராமங்களில் வழமைபோல் அரிசி விநியோகம் இடம்பெறுகின்றது

## வவு. அரச அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியா நிவாரணக் கிராமங்களில் வழமைபோல் அரிசி விநியோகம் இடம்பெறுவதாகவும் அரிசி வழங்கப்படுவதில்லையென்றும் தண்ணீர்ப் பற்றாக்குறை நிலவுவதாகவும் வெளியாகியிருக்கும் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவையென வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சார்ள்ஸ் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து நிவாரணக் கிராமங்களில் தங்கியுள்ளோருக்கு அரிசி வழங்கப்படுவதில்லையெனவும் அதற்கு பதிலாக மா மாத்திரமே வழங்கி வருவதாகவும் தண்ணீர் வசதிகளின்றி மக்கள் அங்கு அவதியுறுவதாக வெளியாகியிருக்கும் செய்திகளை தான் மறுப்பதாக அவர் தெரிவித்தார்.

குறித்த செய்தியில் எவ்வித உண்மையுமில்லையென கூறிய சார்ள்ஸ் வழமைபோலவே நிவாரணக் கிராமங்களில் உள்ளோருக்கு அரிசி வழங்கப்பட்டு வருவதகாகவும் அதில் எவ்வித மாற்றமும் இல்லையெனவும் குறிப்பிட்டுள்ளார்.

சில தினங்களாக எமது களஞ்சியசாலையில் மைசூர் பருப்புக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டின் காரணமாக, பருப்புக் கிடைக்கப் பெறாதவர்களுக்குப் பதிலாக குறித்த அளவு மாவினை நாம் மேலதிகமாக வழங்கினோமே தவிர அரிசி நிறுத்தப்படவில்லை எனவும் அரசாங்க அதிபர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் சுமார் மூன்று இலட்சம் பேர் இருந்த நிவாரணக் கிராணமங்களில், தற்போது 45 ஆயிரம் பேர் வரையிலானோரே தங்கவைக்கப்பட்டுள்ளனர். மூடப்பட்ட நிவாரணக் கிராமங்களைத் தவிர்ந்த ஏனையவற்றில் முன்பிருந்த அதே வசதிகளே தொடர்ந்தும் காணப்படுகின்றன.

இந்நிலையில் தண்ணீர்ப் பற்றாக்குறை நிலவுவதற்கு எவ்வித சாத்தியக்கூறுகளுமில் லையெனவும் தெரிவித்தார்.

அங்கு வேலை பார்க்கும் உத்தியோகத்தர்களிடமிருந்தோ பொதுமக்களிடமிருந்தோ நீர் மற்றும் மலசல கூட வசதியின்மை தொடர்பாக இதுவரை தனக்கு எவ்வித முறைப்பாடும் கிடைக்காத பட்சத்தில் இந்த குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பான தகவலென அவர் கூறியுள்ளார். (6)

## பொருளியல் பாட விசேட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெற வுள்ள க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் பொருளியல் பாடத்திற்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட இலவச கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத் தில் நடைபெறவுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோ கத்தர்களால் இக் கருத்தரங்கு நடத்தப்பட உள்ளதால் இதில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் சீருடையுடன் வருகை தருமாறு ஸ்ரான்லிக் கல்லூரியின் அதிபர் வே.ஞானகாந்தன் அறிவித்துள்ளார். (6)

# புத்தா பார் மதுபான விற்பனை நிலையங்கள் மீது சட்டநடவடிக்கை

## பிரதமர் அறிவிப்பு



(கொழும்பு)

அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்ட நாடுகளில் புத்தா பார் என்ற பெயரில் இயங்கி வரும் மதுபான விற்பனை நிலையங்கள் மற்றும் ஹோட்டல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

புத்தா பார் மதுபான விற்பனை நிலையங்கள் இயங்கி வரும் நாடுகள் தொடர்பில் இராஜதந்திர அதிகாரிகளின் ஊடாக தகவல் கள் திரட்டப்படவுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சின் ஊடாக குறித்த விற்பனை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

குறித்த வகை மதுபான சாலைகளில் புத்த பகவானின் சிலைகள் காணப்படுவதாகவும் அந்த சிலைகளுக்கு முன்னால் மதுபானம் அருந்தப்படுவதுடன் நடன நிகழ்வுகளும் இடம்பெறுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மதுபானம் அருந்தப்படும் இடங்களில் ஏன் புத்த பகவானின் சிலைகள் வைக்கப்பட வேண்டுமென பிரதமர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் உலக பௌத்த சம்மேளனத்திற்கு அறிவிக்கப்படும் எனவும் பௌத்த மதத்திற்கு அவதூறு ஏற்படும் வகையிலான இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (6-4)

# தப்பியோடிய 50 ஆயிரம் இராணுவத்தினர் தலைமறைவு

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடிய 50 ஆயிரம் பேர் இன்னமும் மறைந்து வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு தப்பிச் சென்றவர்கள் தொடர்பில் பூரண விபரங்கள் காணப்படுவதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஆயுதங்கள், வெடிபொருட்களுடன் தப்பிச் சென்றவர்களும் இதில் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுவதோடு இவ்வாறு தப்பிச் சென்றவர்களில் சிலர் குற்றச் செயல்களுடனும் தொடர்புபட்டிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களுக்கு அரசாங்கம் காலத்துக்கு காலம் பொதுமன்னிப்பு காலங்களை அறிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த மாதம் 30 ஆம் திகதி வரையில் பனாகொடை முகாமில் உத்தியோக பூர்வமாக பதவி விலக முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.



எனினும் தப்பிச் சென்றவர்களில் ஒரு தரப்பினர் கொலை, கொள்ளை போன்ற குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டிருப்பதால் சட்டபூர்வமாக பதவிவிலகுவதில் நாட்டம் காட்டுவதில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (6-4)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### இன்று பதினொராம் திருவிழா

### பற்றுடனே காத்திடம்மா

நயினைதனில் வீற்றிருந்து
நல்லாட்சி புரிபவளே
நாகபூசணி தாயே – அம்மா
பாருலகம் மீதினிலே
பாவியர் நாம் பதறுகிறோம்
பக்கத்தில் நீ இருந்து
பற்றுடனே காத்திடம்மா

தென்கோவையூர் - ம.கஜேந்தினி

### கூடும் அன்னையருள்!

ஆழி அலைகள் துள்ளி விளையாடும் –எம்
எண்ண அலைகள் சந்நிதிக்கு ஓடும்!
சோலைமலர்கள் உன்பாதம் நாடும் – தமிழ்
வேதங்கள் என்றும் உன்பாடல் பாடும் !

இன்னல்கள் வேரோடு கருகிவாடும் – தினம்
இன்பங்கள் வாழ்வில் அழியாது ஆடும் !
புண்ணியம் அன்னையின் அருளாலே கூடும் – அன்பு
மனங்களோ நயினைதேவியைத் தேடும் !

இ.கோபிகா -யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

### தரணி தனில் வாழவைப்பாய்

நாகம்மாள் என்றழைத்தால் எம்மை
நாடி வந்து நலம் அருள்வாய்
தேகமெல்லாம் சிலிர்க்குதம்மா
தேவி உன் காட்சி கண்டால் – ஈசன்
பாகத்தில் இடம் பிடித்தாய்
என்றும் நீ – எம்மக்கள்
தாகம் தீர்த்து தரணிதனில்
வாழ வைப்பாய்

மயிலையூரான்

### கண்ணீரினை துடைத்து கருணை காட்டிடு

நயினை நாக பூசணி தாயவளே
நாம் படும் துயரம்தனை தீர்த்திடம்மா
தீவினிலே வாழுகின்ற
திரிலோக சுந்தரியே!
திக்கெட்டும் உன் ஒளிவதனம்
சக்தியாய் அமையட்டும்

வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி

ஆர்.வி.ஜி மருந்தகம்
504, ஆஸ்பத்திரி வீதி,
(O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2129

R.V.G ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 6808

# நவீன எண் ஜோதிடம்

16

வல்லவன் சந்திரனின் தன்மையால் தான் பல கிரகங்களின் செயற்பாடுகள் கூட வளர்வு தேய்வு காரணமாகவும் மாற்றம் அடைகின்றது. பூமி சந்தரனின் மேற் பகுதிக்குச் செல்லும்போது ஒளிமயமாக மாறுகின்றது. அங்கே வளர்பிறையாக காட்சி தருகின்றது. மெல்ல மெல்ல கீழ் பகுதியை மறைக்கும் போது சந்திரனின் தேய்வுப் பகுதியை அது பெறுகின்றது. அப்போது சூரியனின் சாய்வு ஒளிகளையே சந்திரன் பெற்றுக்கொள்வதனால் சந்திர னுக்கு தண் நிறைவு இல்லாததனால் தேய் பிறைக் காலம் பூமிக்கு அதிக தாக்கங் களைக் கொடுக்கக் காரணமாக அமைகின் றது. இதுவே வளர்பிறை தேய்பிறைச் சந்திரனின் அர்த்தமுள்ள இரகசியங்கள் ஆகும்.

மனிதனுக்கு வாக்குத் திறமை, பேச்சுத் திறமை அறிவுத்திறமை கல்வித்திறைமை என்பன முக்கியமானதாகும். அதை வாரி வழங்குவது புதன்.அது 5 என்ற எண்ணிற்கு அதிபதி. 5 ஒன்பது எண்களுள் மத்தியஸ் தர் ஆகும். நடுநிலைமை எண் 5 ஆகும். உடலிற்கும் உணர்விற்கும் உயிரிற்கும் ஆத்மாவிற்கும் மத்தியஸ்தர் புதன் ஆகும். வாக்கு, பேச்சுத் திறமையை புதன் வழங்கு கின்றது. சூரியனுக்கு மிக அண்மித்த கிரகமாகும்.சூரியனின் நட்புக் கிரகமாகும். 1உம் 5 உம் 8 உம் நட்புள்ள எண்கள். சூரிய னின் மகன் சனி. அவை இருவருக்கும் குரு புதன். இந்தவகையில் அவைகளின் ஒற் றுமை அமைந்திருக்கின்றது. ஒருவருடைய பிறப்பு வயது 5 வயதாகும் போது ஐந்தும் தெரிந்தவர் ஆகின்றார். தாய் தந்தை உயர் வுகளைப் புரிந்தவர் ஆகின்றார். 5 உணர்வுகளும் அதாவது, மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய 5 உறுப்புகளும் பிரபஞ் சத்தின் துடிப்பான நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் இந்த 5 இன் உடைய தொடர் புகளையும் ஐக்கியமாகப் பெற்றுக்கொள்ளும் வயதே 5 ஆகும். அது அறிவிற்கு அத்தி பாரம் போடும் வயதுக்காலம். 5 பஞ்ச பூதங்களின் இணைப்பின் பலமாகும். மனித கலத்தோடு இணைக்கும் காலமும் அதன் தொகையும் பஞ்ச பூதமும் வயதும் 5 உம் சேரும் பருவம் புதன் நிறைந்த புத்தியைக் கொடுக்கும் காலமாகும். இதனால் புதன் புத்திக்கு தளபதி ஆகின்றான்.விசேசமான பெற்றார் தம் பிள்ளைகளை காரணம் இன்றி 5 வயதின் முன் அரசினர் பாடசாலையில் கல்வி கற்கும் தகுதியினை பெறும் தகுதி உடையவராக முடியாத காரணமும் இந்தப் பிரபஞ்ச சக்தியின் தன்மையால்தான்.

5 பேர் அறிவும் ஒரு ஜீவனில் சேரும் போது அது ஆய கலைகளை அறிய அலச ஆவல் கொள்ளும் தகுதி கொண்டுள்ளதாக புதன் தன் புத்தியின் சக்தினை ஒவ்வொரு ஜீவனிற்கும் சரசத்தை வழங்கி இருக்கின்ற பெருமை அளப்பரிய அதிசயமாகும்.

புதன் அறிவையும் ஆற்றலையும் சிந் திக்கும் தன்மையையும் வழங்கும் குபேரன்.

ஞான அறிவிற்கு குருவும் கேதுவும் தக்க துணையானவர்கள். அறிவின் விளக்கங் களிற்கும் அதன் ஆழ்ந்த செயற்பாடுகளிற் கும் அதன் பிரதிபலிப்பு படைப்புகளிற்கும் குருவை மீறிய குருவே இல்லை எனலாம். அதன் மேல் ஒரு படி ஏறி ஞான அறிவைப் பெறுவதற்கு குரு வழிநிற்கின்றது. இது எண் களில் 3 இனைக் காட்டி நிற்கின்றது. 3,12, 21,30என்ற எண்கள் குருவின் ஆதிக்கத் தினை குறிகாட்டி நிற்கும் எண்கள் ஆகும். கிரகக் கோள்களில் குரு, வியாழன் வெகு தொலைவில் இருப்பினும் கிரகங்களின் தளபதியாக வியாழனையே ஜோதிடர்கள் குரு என்று கணித்து வைத்திருக்கின்றார்கள். நல்ல எண்களோடு பிறப்பு எண் 3 இருக்கு மாயின் அறிவின் உயர்விற்கு பஞ்சம் ஏதும் இல்லை. அன்றி எதிர்ப்பு எண்கள் பிறப்பு எண்களில் இருக்குமாயின் பிறப்பு எண் களால் பெரும் எதிர்த்தாக்கங்களையும் சந்திக்க வைக்கும். கேது ஞானத்தைக் கொடுப்பது. இது எண் 7 ஐக் குறிப்பது. சோத னையும் வேதனையும் நிறைந்தது. அதி காரத் தன்மையும் அதிக கோபமும் மோகமும் கொண்ட கிரகம் கேது. 7 எண்ணைக் குறித்து நிற்பது.

பலர் 7 இல் பிறந்தவர்கள் 7,16,25 அன்றி கூட்டு எண் 7 தருபவர்கள் இவர் களின் வாழ்க்கைகள் குடும்ப வாழ்க்கை யில் சோரம் போனவர்களாகவே காணப்படு கிறார்கள். சுகம் காணாத நிலையில் இவர் களுடைய வாழ்க்கை அர்த்தங்கள் அற்ற அத்தியாயங்களாகவும் எதிர்பார்த்து ஏமாந்து போகும் வாழ்க்கையில் ஏமாற்றப்பட்ட கோமாளிகளாகவும் பலர் காணப்டுகின்றார் கள். 7 இன் உடைய வடிவம் எழுந்து ஆடும் பாம்பை கழுத்தில் வெட்டிவிட்டது போன்று ஒரு அடையாள வடிவம் அங்கு காணப்படு கின்றது. அதன் முகத்திற்கும் பாதத்திற்கும் தொடர்பு இல்லாமல் துண்டிக்கப்படுகின்றது. இந்தத் துண்டிப்பு வேதனையை இந்த எண் ணில் பிறந்தோர்கள் நிச்சயம் சந்தித்தே ஆக வேண்டிய சூழ்நிலையை இந்த எண் அவர்களிற்கு வழங்கி விடுகின்றது.அந்த7 அதற்குப் பகை உள்ள எண்களோடு சேரும் போது அதாவது 31நாளுக்குள் 1, 2 என்ற எண்களோடு மாத்திரமே சேரக் கூடி யதாக அமையும். 1 உடன் சேரும் போது 17 ஆகவும் அது சூரியனும் கேதுவும் சேர்ந் ததாகவும் பகை உள்ள தன்மையில் இருப்ப தனாலும் இந்த எண்ணில் பிறந்தவர்கள் தனிப்பட்ட ஒரு சரித்திரப் படைப்பினை நடத் தும் கதாசிரியர்களாகவே அமைகின்றார்கள். அவர்கள் பிறக்கும் ஆண்டையும் இடத்தை யும் பொறுத்தது ஏனைய பெருமைக்கும் சிறுமைக்கும் தகுதி வார்த்துக் கொடுப்பது. 17 இல் தோன்றிய பிரமுகர்களும் உண்டு. நாட்டையோ வீட்டையோ கசக்கி கந்தலாக்கிய கயவர்களும் உண்டு. 27 இல் பிறந்த வர்கள் அனுசரித்துப் போகும் தன்மை இருப் பினும் பிறப்பு எண்ணும் பிறக்கும் ஆண் டைப் பொறுத்தும் பெயரைப் பொறுத்தும்

எண் ஜோதிட நிபுணர்
பேராசிரியர் ராஜராயேந்திரன்

வாழ்க்கையின் சூழ்நிலைகள் மாறும். 27 என்பது 108 என்ற எண் மகா மந்திர எண் ணிக்கையின் கால் பகுதியும் வானளாவ பரந்திருக்கும் நட்சத்திரங்களின் தொகை யையும் குறிக்கும் எண்ணாக 27 இருப்பத னால் இது சற்று விசேடமான எண்ணாகக் கணிக்கப்படுகின்றது.

இருப்பினும் சந்திர னோடும் சூரியனோடு சேரும் நிலையில் அசுர எண் ஆண் தன்மையாகவும் பெண் தன்மையாகவும் மாறும் நிலைமையில் சந்திக்கும் வாய்ப் பினைப் பெற்றதாக அமைகின் றது. (தொடரும்)

## நிறைவேற்றதிகார பிரதமர் முறை உருவாக்கப்பட வேண்டும்

### இடதுசாரி கட்சிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்திற்குப் பொறுப் புச் சொல்லக்கூடிய நிறைவேற்று அதிகார பிரதமர் முறையொன்று உருவாக்கப்பட வேண்டுமென இடது சாரி கட்சிகள் ஜனாதி பதியிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத் துள்ளன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை மையின் தவணைக் காலத்தை நீடிப்பதனை இடதுசாரி கட்சிகள் எதிர்ப்பதாக சுட்டிக்காட்டப் பட்டுள்ள அதேவேளை பாராளு மன்றத் திற்கு பொறுப்புச் சொல்லக் கூடிய பிரதமர் பதவிமுறைமை உருவாக்கப்பட வேண்டும் எனவும், அதன் தவணைக் காலம் குறித்து பிரச்சினை இல்லை எனவும் ஜன நாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசு தேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சுயாதீன ஆணைக்குழுக்க ளுக்கான நியமனங்களின் போது பிரதமர், சபாநாயகர் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோரின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையிலான பொறிமுறை உருவாக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் சாசனசபையொன் றின் மூலம் சுயாதீன ஆணைக் குழுக்களுக்கான நியம னங்களை மேற்கொள்ளக்கூடாது எனத் தெரிவித்த அவர் நடைமுறையில் உள்ள அரசியல் சாசன சபையை செயற்படுத் துவதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படு வதாக குறிப்பிட்டுள்ளார். (6-4)

## பயிர்ச்செய்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் கிருமிகளை அழிப்பதற்கு புதிய பற்றீரியா

### இலங்கை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மரக்கறிப் பயிர்ச்செய்கைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் கிருமிகளை அழிப் பதற்கான புதிய பக்ரீரியாவை இலங்கை ஆராய்ச்சி யாளர்கள் கண்டுபிடித்துள்ள னர்.

இலங்கை தொழில்நுட்ப நிறுவனத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரி கலாநிதி சமர சேகர தலைமையிலான குழுவினரால் மேற் கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் பலனாக இந்தப் பற்றீரியா கண்டுபிடிக்கப்பட்டுள் ளது.

பசிலஸ் சுரன்ஜன் சில் என்ற பற்றீரியா வின் உப பிரிவாகப் புதிய பற்றீரியா இனங் காணப்பட்டுள்ளது.

இதனூடாக மரக்கறிச் செய்கைகளுக்கு பாதிப்பை விளைவிக்கும் கிருமிகளை ஒழிக்க முடியுமென ஆராய்ச்சிகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

நுவரெலியா மற்றும் தலாத்து ஓயா ஆகிய பகுதிகளில் இது தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் வெற்றியளித் துள்ளதாகவும் இந்த பக்ரீரியாவைப் பயன் படுத்துவதனால் அதிக அனுகூலங்கள் கிடைப்பதாகவும் கலாநிதி ராதிகா சமரசேகர சுட்டிக்காட்டியுள்ளார். (6)

## கிழக்கில் சுற்றுலா விடுதிகளை நிர்மாணிக்க அரசு திட்டம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் 4ஆயிரம் சுற்றுலா விடுதி அறைகளை நிர்மாணிப்பதற்கு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு சபை திட்ட மிட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு கிழக்கு மாகாணத்தில் விடுதி வசதிகளை செய்துகொடுக்க வேண்டியுள்ளதாக இலங் கை சுற்றுலா ஊக்குவிப்பு சபையின் பணிப் பாளர் நாயகம் திலீப் முததெனிய தெரிவித் துள்ளார்.

கிழக்கு கடற்கரைப் பகுதியில் குச்சவெளி யில் 3ஆயிரம் விடுதி அறைகளையும் பாசிக்குடாவில் ஆயிரம் விடுதி அறைகளை யும் நிர்மாணிக்க அரசாங்கம் உத்தேசித்துள் ளது.

பாசிக்குடாவில் விடுதிகளை அமைக்கும் திட்டத்தை அடுத்த ஆண்டுக்குள்ளேயும் குச்சவெளி திட்டத்தை 2012 ஆம் ஆண்டுக் குள்ளேயும் முடிக்க அரசாங்கம் திட்டமிட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## இந்திய அன்பளிப்பான 5 பஸ்கள்

### வவுனியா நகர எல்லைக்குள் சேவையில்

(கொழும்பு)

இந்திய அரசினால் வவுனியா நகர சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஐந்து புதிய பஸ்களை வவுனியா நகரசபை எல் லைக்குள் சேவையில் ஈடுபடுத்த தீர்மானிக் கப்பட்டுள்ளது.

வவுனியா சிற்றி சேவையென அழைக் கப்படும் இந்த பஸ் சேவைக்கு ஒருநாளைக் கென வழங்கப்படும் அனுமதிச் சீட்டு முழு நாளுக்குமே செல்லுபடியாகும்.

குறைந்த கட்டணம் அறவிடப்படும் இந்த பஸ் சேவைக்கான அனுமதிச் சீட்டுகளை வவுனியாவில் அமைந்துள்ள கடைகளில் பெற்றுக் கொள்ள முடியுமென அரச அதிபர் குறிப்பிட்டார்.

வவுனியா நகரில் நிலவும் போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்கும் முகமாக சில ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளதாகவும் போக் குவரத்துக்கு இடைஞ்சலாகவுள்ள அனைத் துக் கட்டடங்களும் அகற்றப்படும் எனஅவர் தெரிவித்தார்.

இதற்கிணங்க வீதி அபிவிருத்திக்கும் போக்குவரத்துக்கும் இடையூறாக நகரில் உள்ள சில வர்த்தக நிலையங்களை அகற்று மாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (6)

# க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கான நேர அட்டவணை

**09.08.2010 திங்கட்கிழமை**
8.30-11.30
10 இணைந்த கணிதம் – I
12.30 -2.30
09 உயிரியல் – I
12.30 -3.30
21 பொருளியல் –I - பகுதி –I,II

**10.08.2010 செவ்வாய்க்கிழமை**
8.30-11.30
09 உயிரியல் – II
21 பொருளியல் –II - பகுதி –I,II
12.30 -3.30
53 நாட்டியம் பரதம் – I
54 கீழைத்தேய சங்கீதம் –I
55 கர்நாடக சங்கீதம் –I
56 மேலைத்தேய சங்கீதம் – I

**11.08.2010 புதன்கிழமை**
8.30-11.30
10 இணைந்த கணிதம் – II
53 நாட்டியம் பரதம் – II
12.30 -2.30
08 விவசாய விஞ்ஞானம் – I

**12.08.2010 வியாழக்கிழமை**
8.30-11.30
33 கணக்கீடு – I பகுதி –I,II
51 சித்திரம் – I
12.30 -3.30
54 சங்கீதம் கீழைத்தேயம் –II
55 சங்கீதம் கர்நாடகம் –II
56 சங்கீதம் மேலைத்தேயம் –II

**13.08.2010 வெள்ளிக்கிழமை**
8.30-10.30
01 பௌதீகவியல் – I
8.30-11.30
33 கணக்கீடு– II- பகுதி –I,II
51 சித்திரம் – II
2.00 -5.00
08 விவசாய விஞ்ஞானம் – II

**14.08.2010 சனிக்கிழமை**
8.30 – 11.30
01 பௌதிகவியல் – II
51 சித்திரம் – III
12.30 -3.30
24 அளவையியலும் விஞ்ஞானமும் – I

**16.08.2010 திங்கட்கிழமை**
8.30 – 11.30
72 தமிழ் – I
12.30 -3.30
28 மனைப்பொருளியல் –I

**17.08.2010 செவ்வாய்க்கிழமை**
8.30 – 11.30
72 தமிழ் – I I
12.30 -3.30
28 மனைப்பொருளியல் –II

**18.08.2010 புதன்கிழமை**
8.30 – 10.30
02 இரசாயனவியல் – I
8.30 – 11.30
75 சமஸ்கிருதம் – I
12.30 -3.30
24அளவையியலும் விஞ்ஞானமுறையும் –II

**19.08.2010 வியாழக்கிழமை**
8.30 – 11.30
02 இரசாயனவியல் – II
75 சமஸ்கிருதம் – II
12.30 -3.30
32 வணிகக் கல்வி – I பகுதி –I,II

**20.08.2010 வெள்ளிக்கிழமை**
8.30 – 11.30
13 பொது ஆங்கிலம் – I
2.00 -4.30
13 பொது ஆங்கிலம் - பகுதி II

**21.08.2010 சனிக்கிழமை**
8.30 – 10.30
14 குடிசார் தொழில்நுட்பவியல் – I
15 பொறிமுறைத் தொழில்நுட்பவியல் – I
16 மின் இலத்திரன் தகவல் தொழில்நுட்பவியல் – I
17 உணவுத் தொழில்நுட்பவியல் – I
18 விவசாயத் தொழில்நுட்பவியல் – I
19 உயிர்வளத் தொழில்நுட்பவியல் – I
29 தொடர்பாடல் ஊடகக் கற்கை – I
12.30 -3.30
25A வரலாறு (இந்திய) – II பகுதிI, II
25B வரலாறு (ஐரோப்பிய) – II பகுதிI, II

**23.08.2010 திங்கட்கிழமை**
8.30 – 11.30
25 வரலாறு – I பகுதிI, II
12.30 -3.30
73 ஆங்கிலம் – I

**25.08.2010 புதன்கிழமை**
8.30 – 11.30
46 இந்துநாகரிகம் – I
47 இஸ்லாமிய நாகரிகம் – I
12.30 -3.30
32 வணிகக் கல்வி – II பகுதி I, II

**26.08.2010 வியாழக்கிழமை**
8.30 – 11.30
14 குடிசார் தொழில்நுட்பவியல் – II
15 பொறிமுறைத் தொழில்நுட்பவியல் – II
16 மின் இலத்திரன் தகவல் தொழில்நுட்பவியல் – II
17 உணவுத் தொழில்நுட்பவியல் – II
18 விவசாயத் தொழில்நுட்பவியல் – II
19 உயிர்வளத் தொழில்நுட்பவியல் – II
29 தொடர்பாடல் ஊடகக் கற்கை – II
12.30 -3.30
22 புவியியல் - பகுதி I

**27.08.2010 வெள்ளிக்கிழமை**
8.30 – 11.30
07 கணிதம் – I
11 உயர்கணிதம் – I
2.00 -5.00
22 புவியியல் – II பகுதிI, II

**28.08.2010 சனிக்கிழமை**
8.30 – 11.00
12 பொது சாதாரண பரீட்சை
12.30 -3.30
22 புவியியல் – III பகுதிI, II

**30.08.2010 திங்கட்கிழமை**
8.30 – 11.30
07 கணிதம் – II
11 உயர்கணிதம் – II
12.30 -3.30
46 இந்துநாகரிகம் – II
47 இஸ்லாமிய நாகரிகம் – II

**31.08.2010 செவ்வாய்க்கிழமை**
8.30 – 11.30
23 அரசியல் மூலதத்துவங்கள் –I பகுதிI, II
12.30 -3.30
73 ஆங்கிலம் – II

**01.09.2010 புதன்கிழமை**
8.30 – 11.30
23 அரசியல் மூலதத்துவங்கள் –II பகுதிI, II
12.30 -3.30
58 நாடகமும் அரங்கியலும் – I

**02.09.2010 வியாழக்கிழமை**
8.30 – 11.30
31 வணிக புள்ளிவிபரவியல் –I
58 நாடகமும் அரங்கியலும் – II
12.30 -3.30
42 இந்துசமயம் – I
43 கிறிஸ்தவம் – I
44 இஸ்லாம் – I

**03.09.2010 வெள்ளிக்கிழமை**
8.30 – 11.30
31 வணிக புள்ளிவிபரவியல் –II
58 நாடகமும் அரங்கியலும் – III
2.00 -5.00
42 இந்துசமயம் – II
43 கிறிஸ்தவம் – II
44 இஸ்லாம் – II


இணுவில் கந்தசுவாமி கோவில் மஹோற்சவம்




ஆறாம் திருவிழா

இணுவைக் கந்தன் கழலடிகள் பணிமனமே

பல்லவி
இணுவைக் கந்தன் கழலடிகள் பணிமனமே – தினமும்
உந்தன் வினையகற்றும் செந்தமிழ் இணுவை வளர்
அனுபல்லவி
அந்தமில்லாத வேத அருமறை புகழ்பவன்
சுந்தரியாள் சுதன் சுப்ரமண்யன் குகன்
சரணம்
முந்தை வினையெல்லாம் முற்றுமே நீக்கிடுவான்
பந்தமகற்றி உந்தன் பாபங்கள் போக்கிடுவான்
விந்தை மயில் மீதேறி விரைந்தருள் செய்திடுவான்
சிந்தையில் அன்பு செய்ய சிறப்பெலாம் தந்திடுவான்
அமரர் பிரம்மஸ்ரீ மகாவித்துவான் வீரமணிஜயர்

முந்தையிலே

முந்தையிலே முருகா என அழைத்ததனால் –என்
சிந்தை வழி புகுந்து சித்துக்கள் தந்திட்டாய்
சந்தமுடன் திருப்புகழ் செப்பியதனால்
கந்த சேவடிதனை கண்டு கொண்டேன்
இணுவை இறையன்பன்

ஆறுதலைத் தந்திடுவாய்

இணுவையில் உறைபவனே
அழகனே
எங்கள் முருகனே
உன் சந்நிதியை நாடி
வந்தோம்
எம்
தொல்லைகளைத்
தொலைதூரம்
விரட்டிடுவாய்
மனதில் ஆறுதலைத்
தந்திடுவாய்
சு.ஜெயரூபன், பருத்தித்துறை

பச்சை மயில் மீது வேலுடனே நீ வருவாய்

இணுவைப் புகழ் நாயகனே, இனிய முருகையா
எல்லையில்லாத துன்பத்தை துடைத்தெறிய வந்திடுவாய்

கள்ளமில்லா அன்பர்களை காத்தருளும் கந்தவேலே– எம் உள்ளத்தை
கொள்ளைகொண்ட உன்கருணை வேண்டி நிற்கின்றோம்

வண்ணமயில் முருகா வள்ளிமணவாளா
பச்சைமயில் மீது வேலுடனே நீ வருவாய்
துள்ளி வரும் இன்பம் தொடர்ந்து நிலைத்திடவே
தொல்லைகள் தான் நீங்கி, துன்பங்கள் தொலைந்திடவே
கிள்ளை மொழியாளுடன் தரிசனம் நீ தந்திடுவாய்
தென் இணுவை கோபி

(1709)

அனுசரணை :– 6 ஆம் திருவிழா உபயகாரர்


# இலங்கைக்கு 840 கோடி ரூபா வழங்குகிறது ஐரோப்பிய ஒன்றியம்

(கொழும்பு)

இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பகுதிக்கென உதவியாக 840 கோடி ரூபாவை ஐரோப்பிய ஒன்றியம் ஒதுக்கீடு செய்துள்ளது.

நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிக்கு இடைக் கால உதவித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக இந்த உதவி வழங்கப்படுவதாக இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூகத்தில் நலிவடைந்த நிலையிலுள்ளோரின் தேவைகளைக் கவனத்தில் கொண்டு குறிப்பாக 2009 இல் முடிவுக்கு வந்த மோதலில் பாதிக்கப்பட்டோரின் தேவைகளை மையப்படுத்தி அவர்களுக்கு ஆதரவாக அதாவது சமாதானம், உறுதித்தன்மை, நல்லிணக்கம் என்பனவற்றை நோக்கி முன்நகர்வை மேற்கொள்வதற்காக இந்த ஆதரவு வழங்கப்படுவதாக ஐரோப்பிய ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. (6)

## துருக்கி விமானங்கள் ஈராக் மீது குண்டு வீசித் தாக்குதல்

(பாக்தாத்)

ஈராக்கின் வடபகுதியில் துருக்கி எல்லையையொட்டி குர்திஷ் இனமக்கள் வாழும் பகுதியுள்ளது. இது மலைகளால் சூழ்ந்துள்ளது. இங்குள்ள தீவிர வாதிகள் துருக்கி நாட்டுக்குள் புகுந்து வன்முறை செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே , அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் துருக்கி அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில் நேற்று முந்தினம் 2 துருக்கி விமானங்கள் ஈராக்கின் குர்தீஷ் மலை பகுதியில் சரமாரியாக குண்டு வீதி தாக்குதல்களை நடத்தின.

அங்குள்ள ஆர்பிஸ் மாகாணத்தில் சிதாகான் மாவட்டத்தில் உள்ள லோலான் என்ற இடத்தில் பதுங்கியிருந்த குர்திஷ் தீவிரவாதிகள் மீது துருக்கி போர் விமானங்கள் குண்டுகளை வீசின. இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5.20 மணிக்கு நடந்தது.

ஏற்கனவே கடந்த சனிக்கிழமை சேதிகான் மாவட்டத்தின் மீது துருக்கி போர் விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தியதில் 11 வயது சிறுமி உயிரிழந்ததுடன் 2 பேர் காயம் அடைந்தனர். இந்த தகவல் இணைய தளம் ஒன்றின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. (6)

## போலந்தில் ஜனாதிபதித் தேர்தல்; 10 வேட்பாளர்கள் போட்டி

(வார்சா)

போலந்து ஜனாதிபதித் தேர்தல் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது. இதில் 10 பேர் போட்டியிட்டனர்.

போலந்து ஜனாதிபதியாக இருந்த லெக் கசின்ஸ்கி கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி ரஷியா சென்ற போது , விமான விபத்தில் கொல்லப்பட்டார். அவருடன் சென்ற அவரது மனைவி மற்றும் உயர் அதிகாரிகள் 96 பேர் விபத்தில் உயிரிழந்தனர். இதை அடுத்து இடைக்கால ஜனாதிபதியாக அந்நாட்டு நாடாளுமன்ற தலைவர் போரின்ஸ்லோ கொமொரொவ்ஸ்கி பதவியேற்றார்.

இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் தான் அங்கு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும். எனினும் ஜனாதிபதி கொமொரொவ்ஸ்கி முன் கூட்டியே தேர்தலை நடத்த திட்டமிட்டு அதற்கான அறிவிப்பை வெளியிட்டார். அதன்படி கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.


இந்த தேர்தலில் மொத்தம் 10 வேட்பாளர்கள்போட்டியிட்டனர். எனினும் இடைக்கால ஜனாதிபதி கொமொரொவ்ஸ்கிக்கும் உயிரிழந்த ஜனாதிபதியின் சகோதரர் ஜரோஸ்லாகசின்ஸ்கிக்கும் இடையே தான் முக்கிய போட்டி நிலவியது.



இந்த தேர்தலில் வாக்களிக்க சுமார் 30 இலட்சம் வாக்காளர்கள் தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்திருந்தனர். சுமார் 26 ஆயிரம் வாக்குச் சாவடிகளில் வாக்குப் பதிவு நடைபெற்றது.

பிரதமர் டொனால்டு டஸ்குடன் இணைந்து செயல்படுவது சந்தை மற்றும் பொருளாதார சீர்திருத்தம் உள்ளிட்ட பல வாக்குறுதிகளை இடைக்கால ஜனாதிபதி கொமொரொவ்ஸ்கி மக்களுக்கு செய்வதாக தெரிவித்திருந்தார். மறைந்த ஜனாதிபதியின் சகோதரர் ஜரோஸ்லா ஏற்கனவே பிரதமராக பதவி வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவர் இது போன்ற பொருளாதார சீர்திருத்தங்களுக்கு எதிரானவர் உலகப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது அதனால் பாதிக்கப்படாத ஒரே ஐரோப்பிய நாடு போலந்து மட்டும் தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (6)

## இனத்துவ போராளிக் குழுத்தலைவருக்கு ஈரானின் மரண தண்டனை நிறைவேற்றம்



இனத்துவ போராளி குழுவொன்றின் தலைவரொருவருக்கு ஈரானில் தூக்குத் தண் டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜுன்டுல்லாஹ் போராளி குழுவின் தலை வரான அப்டொல் மாலெக் றிகி என்ற மேற்படி நபர் அவரால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் முன்னிலையில் தூக்கிலிடப் பட்டார். கடந்த பெப்ரவரி மாதம் கைது செய்யப்பட்ட இவர் சிஸ்டான் - பலுசிஸ்டான் மாகா ணத்தில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்களுக்கு பின்னணியிலிருந்ததாக றிகி குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருந்தார்.

அவருக்கு எவின் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் காலை மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. (6-4)

## சூரிய காந்தப்புலத்தில் தீச்சுவாலைகளின் அதிர்வுகளிலிருந்து ரம்மியமான இசை

(லண்டன்)

சூரியனின் வெளிப்புறத்தில் உள்ள காந்தப் புலத்தில் தீச்சுவாலைகளால் ஏற்படும் அசைவுகளிலிருந்து ரம்மியமான இசை உருவாவதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

பிரிட்டனின் ஷெப்பீல்டு பல்கலைக்கழக விஞ்ஞானிகள் சூரியனை பற்றி பல்வேறு விடயங்களை ஆய்வு செய்து வருகின்றனர். றொபர்டஸ் ஒன் பே என்ற விஞ்ஞானி தலைமையிலான குழு சூரிய காந்தப்புலத்தில் தீச்சுடர்களின் அசைவுகளால் கிற்றார் கருவியிலிருந்து எழும் இசையை போன்றும் புல்லாங்குழல் போன்ற காற்று கருவிகளிலிருந்து வரும் இசையை போன்ற ஒலி எழுவதாக கண்டறிந்துள்ளனர்.

இந்த ஓசையை வைத்து சூரியனில் நெருப்பு சுடர்கள் உருவான விதத்தையும் கண்டறிய முடியும் என இந்த விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

சூரியனின் தீச்சுவாலைகள் 60 ஆயிரம் மைல் நீளமுள்ளவையாக இருக்கும் என கூறும் இந்த விஞ்ஞானிகள் எப்படி அதிர்வுகளில் இருந்து எழும்பும் ஓசை இருக்குமோ அதுபோல இந்த ஓசை இருப்பதாக ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. (6)

## ஒபாமாவுக்கு அல்கொய்தா எச்சரிக்கை

(கெய்ரோ)

நீங்கள் நீண்ட நாட்களுக்கு புகழ் பெற்ற மனிதராக இருக்க முடியாது என அல்கொய்தா பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஒபாமாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அல்கொய்தா அமைப்பின் தலைவர்களில் ஒருவர் ஆதம் கடான். கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் கடானை அமெரிக்க புலனாய்வுத்துறையினர் தேடிவருகின்றனர். அரபு நாட்டு வம்சாவழியைச் சேர்ந்த கடான் அமெரிக்க குடியுரிமை பெற்றவர். கடானை பற்றி தகவல் தருவோருக்கு ஐந்து கோடி ரூபாய் வெகுமதி வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கடான் கடந்த மார்ச் மாதம் பேசிய பேச்சின் வீடியோ ஒளிநாடா நேற்று முன்தினம்இணையத்தளத்தில் வெளியிடப் பட்டது. அதில் கடான் குறிப்பிடுகையில் ,



ஈராக் மற்றும் ஆப்கானி ஸ்தானில்நிறுத்தியுள்ள அமெரிக்க படைகளை வாபஸ் பெறுங் கள். இஸ்ரேலுக்கு ஆதரவளிப்பதை நிறுத் துங்கள். முஸ்லிம் விவகாரங்களில் தலையி டுவதை நிறுத்துங்கள். முஸ்லிம் கைதிகளை விடுதலை செய்யுங்கள். இதை செய்தால் அமெரிக்காவுடன் சுமுகமாக செல்வோம் என்று குறிப்பிட்டுள்ளார். (6)

## பிரேஸிலில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இருபது பேர் பலி

பிரேஸிலின் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தினால் 20 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேஸிலின் சில பகுதிகளில் 36 சென்ரி மீற்றர் வரையில் மழை பெய்துள்ளதுடன் அலகோவாஸ் மற்றும் பெர்னாம்புக்கோ ஆகிய மாநிலங்களில் உயிர்ச் சேதங்கள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை மழை வெள்ளம் காரணமாக 50 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன் மழையினால் பாதிக்கப்பட்ட நகரங்களில் அவசர நிலைமை அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் படகு மூலமாகவும் ஹெலிகொப்டர் மூலமாகவும் மீட்கப்பட்டு வருவதாகவும் மோசமான காலநிலை தொடர்வதனால் மீட்புப் பணிகளை மேற்கொள்வதில் சிக்கல் நிலை காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

2009ஆம் ஆண்டில்இதேபிரதேசத்தில்இடம் பெற்ற மழை வெள்ளத்தினால் 49 பேர் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

## ஈராக்கில் இடம்பெற்ற இரட்டை குண்டுத்தாக்குதலில் 26 பேர் பலி

ஈராக்கில் இடம்பெற்ற இரட்டை குண்டுத் தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கிய தலைநகர் பக்தாத்தின் அரசாங்க வங்கியொன்றுக்கு அருகாமையில் இந்த குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் குண்டுத் தாக்குதலினால் , அருகிலிருந்த உள்துறை அமைச்சு அடையாள அட்டை மையம் உள்ளிட்ட பல முக்கிய கட்டடங்கள் கடுமையாக சேதமடைந்துள்ளதெனவும் கடந்த மார்ச் மாதம் ஈராக்கில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களின் பின்னர் கடுமையான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வெடி பொருட்கள் நிரப்பப்பட்ட கார்களைக் கொண்டு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் ஒவ்வொரு காரிலும் 80 கிலோ கிராம் வெடி பொருட்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு கார்களும் ஒரே நேரத்தில் வெடிக்கச் செய்யப்பட்டுள்ளதாகவும் அருகிலிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளதாக்வும் குறிப்பிடப்படகிறது. (6)



சீனாவில் தொடர்ந்து பெய்துவரும் பலத்தமழைக்கு 132 பேர் பலியாகியுள்ளதுடன் 20 க்கும் மேற்பட்ட ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. இதனால் அங்குள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## மெக்ஸிக்கோவில் ஹெலிகொப்டர் விபத்து; 10 பாதுகாப்பு படைவீரர்கள் பலி

(சாண்டியாகோ)

மெக்ஸிகோவில் கடந்த வெள்ளிக்கிழமையன்று பாதுகாப்பு வீரர்கள் சென்ற ஹெலிகொப்டர் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் ஹெலிகொப்டரில் பயணித்த 11 வீரர்களும் பலியாகியுள்ளனர்.

மெக்ஸிகோவில் போதைப்பொருள் கடத்தல் அதிகரித்துள்ளதால் இதைத் தடுப்பதற்கு அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. சட்டவிரோதமாக போதைப்பொருள் கடத்துவோரை கண்டறியும் பணியில் நாடு முழுவதும் 50 ஆயிரம் வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

11 வீரர்களும் இப்பணியில் ஈடுபடவே அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும் சாண்டியாகோ பகுதியில் சீரற்ற வானிலை நிலவியதால் ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளாகி அவர்கள் பலியாகியுள்ளனர் என்றும் அந்நாட்டு பாதுகாப்புத்துறை தலைமை அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

கெட்ட நடவடிக்கைகள் ஆரம்பத்தில் இன்பமாக இருந்தாலும் கடைசியில் கொடும் துன்பக் காட்டுக்குத்தான் அழைத்துச் செல்லும். - *கவி தாம்ஸன்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## துச்சாதனா ! அகாஷியை விட நீ நல்லவனடா !

பாண்டவருக்கும் கௌரவருக்கும் யுத்தம் நடந்ததில் யார் வெற்றி பெற்றார்கள் என்ற முடிபை அறிவதிலேயே பலரும் ஆர்வப்படுவர்.

யுத்தம் என்று ஒன்று நடந்துவிட்டால்,அதில் யாரோ ஒரு பகுதியினருக்கு வெற்றி கிடைத்தாக வேண்டும்.

எனவே யுத்தத்தில் வெற்றி தோல்வி என்ற முடிபை அறிவதற்கு முன்னதாக அந்த யுத்தத்தால் ஏற்பட்ட அழிவுகள் எத்தன்மையது, அதன் பாதிப்புகள், இழப்புகள், துயரங்கள், அவலங்கள் இவை பற்றி ஆராய்வது மனிதநேயத்தின் பாற்பட்டது.

யுத்த வெற்றியைக் கண்டு இறுமாப்படைவதும், தோற்ற இனத்தை வாட்டி வதைப்பதும் வீரத்துக்கு இழுக்கானது.

வீரம் எதுவெனில், பிறர் மன நோகா பெருந்தன்மை என்பது வீரத்திற்கான எமது வரைவிலக்கணம்.

இதில் சிலருக்கு உடன்பாடு இருக்காமல் போகலாம். பரவாயில்லை. யாபேரும் ஏதேனும் ஒரு விடயத்திலேனும் உடன்பாடு கண்டனர் என்று கூறமுடியாதல்லவா?

எனவே வீரம் என்பது மற்றவர் மனத்தை நோகடிக்கா பெருந்தன்மை என்பதை இப்போதைக்கு முன்வைத்துக் கொள்ளலாம்.

எனவே யுத்தத்தில் வெற்றி பெற்றவர்கள் மிகவும் நிதானமாக நடந்துகொள்ளவேண்டிய கடமைப்பாட்டைக் கொண்டவர்கள்.

யுத்தத்தால் ஏற்பட்ட இழப்புகள், மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் என்பவற்றை நிவர்த்திக்கும் பணியை நேர்மையாகச் செய்யும் கடமையும் அவர்கள் பக்கம் உண்டு.

இதிலிருந்து எவர் விலகினாலும் ,அதன் பாவம் அவர்களை விட்டுவிடாது.

அட! யுத்தத்தால் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்யாமல் விட்டால் மாபாவம் வருத்துமென்றால்,

யுத்தத்தை தூண்டிவிட்டு உயிர் அழிவுகள் ஏற்படுவதற்கு காரணகர்த்தாக்களாக இருந்தவர்களின் நிலை எப்படி இருக்குமென்று நாம் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

ஐயா ஒரு சந்தேகம்! துச்சாதனன் என்றீர்களே! அது பற்றி... துரியோதனனின் கட்டளைப்படிதான் துச்சாதனன் கோழைத்தனமாக பாஞ்சாலியின் சேலையைப் பற்றி இழுத்தான். இருந்தும் அவனை இந்த உலகம் இன்று வரை தூற்றுகின்றது.

அட! அப்படியா! துச்சாதனனுக்குப் பிறகு வேறு எவருமே அப்படி இல்லையா? உங்கள் நினைப்புத் தெரிகிறது.

ஏன் இல்லை? எங்கட ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி இருக்கிறாரே?

இலங்கை விவகாரங்களில் ஐ.நா. சபையைத் தலையிடக் கூடாது என்று சொல்கிறார் அல்லவா?

இரண்டாம் உலகப் போரின் கொடூரத்தை அனுபவித்த நாடு ஜப்பான். அதனால்தான் ஐ.நா. சபையே தோற்றம் பெற்றது.

நிலைமை இதுவாக இருக்கும்போது இலங்கை விவகாரத்தில் ஐ.நா.சபை தலையிடக்கூடாது - ஐ.நாவின் விசேட குழு யுத்த விசாரணை நடத்தக் கூடாது என்று கூறும் ஜப்பானின் அகாஷியைவிட துச்சாதனன் எவ்வளவோமேல்.

ஆகவே இனிமேல் துச்சாதனனின் பெயரை எடுத்துவிட்டு அகாஷியின் பெயரை அந்த இடத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.பாவம் துச்சாதனன்.அவன் நல்லவன்.

# இடம்பெயர்ந்த அனைவருக்கும் சொந்தக்காணியில் குடியமர அனுமதி

## மீள்குடியேற்ற பிரதியமைச்சர் தெரிவிப்பு

இடம்பெயர்ந்த அனைவருக்கும் அவர்களது சொந்தக் காணியில் மீளக்குடியமர அனுமதி வழங்கப்படும் என்றும் அதற்கான காணி உறுதியை சமர்ப்பிக்க காணிக் கச்சேரிகள் அமைக்கப்படவுள்ளதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ,முல்லைத்தீவு மாவட்டங்களில் மக்களை அவர்களது சொந்தக்காணிகளில் குடியமர்த்துவதற்கு ஏதுவாக காணி கச்சேரிகளை உடனடியாக இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டார்.

கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தினுள் உடனடியாக காணிக் கச்சேரியை அமைக்குமாறு அரச அதிபரை பிரதி அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளதுடன் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருக்கும் இது குறித்து வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த சென்ற அனைவருக்கும் அவர்களது சொந்தக் காணியில் மீளக் குடியமர அனுமதி வழங்கப்படும் எனவும் அதற்கு அவர்கள் காணிக்குரிய உறுதியை சமர்ப்பிக்க முடியும் . உறுதியைப் பெற்றுக்கொள்வதற்காகவே காணி கச்சேரிகள் அமைக்கப்படவுள்ளது.

வவுனியா,மன்னார்,கிளிநொச்சி,முல்லைத்தீவு, யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு மீள் குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவுடன் சென்று நிலைமைகளை நேரில் கண்டு ஆராய்ந்ததுடன் துரித மீள்குடியேற்ற விடயத்தில் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பாக ஜனாதிபதியுடன் சந்தித்துபேசவுள்ளதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு கிராம சேவகர் பிரிவில் இடம்பெயர்ந்தவர்கள் 100 குடும்பங்கள் இருப்பின், அவர்கள் இப்போது 125 குடும்பங்களாக மாற்றமடைந்து குறிப்பிட்ட 125 குடும்பங்களுக்குமே காணி தேவை எனக்கூறும் நிலையும் ஏற்பட்டுள்ளதாக கூறிய அவர் அவ்வாறு காணிகள் வழங்க முடியாது என்றும் கூறினார்.

100 குடும்பங்கள் இடம்பெயர்ந்திருப்பின் அந்த 100குடும்பங்களுக்குரிய காணிகள் வழங்கப்படும். அதற்குரிய தாய் உறுதிகளை அவர்கள் காண்பிக்க வேண்டும் காணி உறுதிகளை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (6-4)

## இலங்கை-ஆப்கானிஸ்தான் அகதிகள் தொடர்பான கெடுபிடிகளை அரசாங்கம் தளர்த்த வேண்டும்

### அவுஸ்திரேலியாவின் க்ரீன் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அகதிகள் தொடர்பான கெடுபிடிகளை அரசாங் கம் தளர்த்த வேண்டுமென அவுஸ்திரேலியாவின் க்ரீன் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

உலக அகதிகள் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் க்ரீன் கட்சி இதனைச் சுட்டிக்காட்டியுள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் புகலிடக் கோரிக் கைகளை இடைநிறுத்தியுள்ளமை குறித்தும் அரசாங்கத்தின் பிழையான கொள்கைகளினால் ஏற்படக் கூடிய விளைவுகள் குறித்தும் உணரப்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

சிறுவர்கள், பெண்கள் மற்றும் ஆண்கள் கால வரையறையின்றி பாலைவனச் சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் பாரிய உடல் மற்றும் உள ரீதியான பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிடும் எனவும் கட்சி தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் கொள்கை மக்களை துன்பப்படுத்தும் வகையில் அமைந்துள்ள தென அவுஸ்திரேலிய க்ரீன் கட்சியின் செனட்டர் சாரா ஹென்சன் யொங் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோத மாக பிரவேசிக்கும் 96 வீதமானவர்கள் உண்மையான புகலிடக் கோரிக்கையாளர்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உதவி தேவைப் படும் மக்களை தற்போதைய அரசாங்கம் நடத் தும் விதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (6-4)

## மீள் குடியேற்றப்பட்ட குடும்பங்களில் இருந்து பொலிஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

வடக்கில் மீள் குடியேற்றப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 300 இளைஞர் ,யுவதிகளை பொலிஸ் சேவையில் இணைத்து கொள்வது குறித்து பாதுகாப்பு அதிகாரிகள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

கிளிநொச்சி ,முல்லைத்தீவு,மன்னார் மாவட்டங்களில் மீள் குடியேற்றப்பட்ட குடும்பங் களில் உள்ள தகுதியான இளை ஞர், யுவதிகள் இதற்காகத் தெரிவு செய்யப்பட வுள்ளனர்.

அடுத்த வருடம் இவர்கள் பொலிஸ் சேவையில் இணைத்து கொள்ளப்படவுள்ளதுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் பொலிஸ் பயிற்சி கல்லூரி ஒன்றை அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 265 இளைஞர்களும் 16 யுவதிகளும் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் இவர்கள் பயிற்சிக்காக தற்போது களுத்துறை பொலிஸ் பயிற்சிக்கல்லூரியில் சேர்க்கப்பட்டு பயிற்சிகளை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6)

## நவீன தொழிநுட்ப முறையில் மின்சாரம் விநியோகிக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் மின்சார சபை ஸ்மார்ட் மீற்றரிங் என்ற நவீன தொழில்நுட்ப முறையில் மின்சாரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் மூலம் முற்கொடுப்பனவு முறையில் மக்களுக்கு மின்சாரத்தை வழங்க முடியும் என அதன் தலைவர் வித்யா அமரபால தெரிவித்துள்ளார்.

இத்தொழில்நுட்பம் அறிமுகமானதன் பின்னர் தற்போது பாவனையில் உள்ள மின்மானிக் கட்டமைப்பு முழுமையாக மாற்றமடையும் என இலங்கை மின்சார சபை தெரிவிப்பதோடு,புதிய தொழில்நுட்ப முறை காரணமாக நுகர்வோருக்கு பல்வேறு வசதிகள் கிடைக்கும் என சுட்டிக்காட்டப்படுகிறது.

புதிய முறையின் கீழ் பாவனையாளர்கள் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு தாம் முதல்நாள் பயன்படுத்திய மின்சாரத்தின் அளவை அறிந்துகொள்ள முடியும் என சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதைத்தவிர மாதக்கட்டணங்களைத் தெரிந்துகொள்ளக் கூடிய வாய்ப்பு பாவனையாளர்களுக்கு கிடைக்குமெனவும் அவர் தெரிவித்தார். (6)

## வெளிநாடுகளில் புலிகள் அமைப்புக்கு ஆதரவான இணையத்தளங்கள் தொடர்ந்து இயங்குகின்றன

### பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் விடுதலைப்புலிகள் அமைப்பு இல்லாதொழிக்கப்பட்ட போதிலும் வெளிநாடுகளில் விடுதலைப்புலிகளுக்கு சார்பான இணையத்தளங்கள் செயற்பட்டுவருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் நேற்று காலை படையி னருக்கான இராணுவத் தலைமையகம் ஒன்று திறந்து வைக்கப்பட்ட போது இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பிரித்தானியாவில் குளோபல் தமிழ்ப் போரம் புலிகளுக்கு ஆதாரவாகச் செயற்படு வதாகவும் அமெரிக்காவில் நாடு கடந்த அரசாங்கம் நிறுவுறுவதற்கு முனைவதாகவும் நோர்வேயில் இன்னமும் விடுதலைப் புலிகள் இருப்பதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகளிடமிருந்து நாட்டை பாதுகாக்கும் முகமாக நாட்டைச்சூழவுள்ள கடற்பரப்பில் கடற்படையினர் தீவிர பாதுகாப் புப்பணிகளில் ஈடுபட்டிருப்பதாகவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பொதுமக்களுடன்நல்லுற வைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கையில் தற்போது இராணுவத்தினர் ஈடுபட்டுவருவதாகவும் அவர் மேலும் கூறினார். (6)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### வாழ்க்கை



எனக்கு நீயே வேண்டும்,வேறு எதுவும் தேவையில்லை. நீ என்னில்,நான் உன்னில் . நீயே நான், நாளை நீ, என்று பகல் இரவாகச் சொல்லுங்கள்.செல்வம் போய்விடும்.அழகு அழிந்து விடும். வாழ்க்கை வாடி விடும்,ஆற்றல்கள் அழிந்துவிடும்; ஆனால்,கடவுள் என்றும் இருக்கிறார். அன்பு எப்போதும் இருக்கிறது. எந்திரமாகிய இந்த உடலை நன்றாகச் செயல்பட வைத்துக்கொண்டிருப்பது பெரிய விஷயம் தான்,ஆனால் ஆன்மாவை உடலின் துயரங்களில் பங்கு பெறாமல் பிடித்து வைத்திருப்பது அதை விடப் பெருமை வாய்ந்தது. அப்படி ஜடத்தை தனியாக இயங்க விடுவது தான் நீங்கள் ஜடம் அல்ல என்பதற்கு அத்தாட்சி.

# உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நாளை கோவையில் கோலாகல ஆரம்பம்

(கோவை)

கோவையில் நாளை உலகத்தமிழ் செம்மொழி மாநாடு கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளது.


தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து கிடைத்த பின்பு நடத்தப்படும் முதல் உலகத் தமிழ் மாநாடு என்பதால் உலகளவில் தமிழர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

5 நாள் மாநாட்டை ஒட்டி ஆய்வரங்கம், கண்காட்சி, புத்தகத்திருவிழா, கலைவிழாக்களுக்கு பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

செம்மொழி மாநாட்டுடன் இணைய தமிழ் மாநாடும் எதிர்வரும் 24 ஆம் திகதி தொடங்குகிறது. தொடக்க விழாவுக்கு தமிழர்களின் பண்டைய கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் பிரமாண்ட பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 60 ஆயிரம் பேர் அமர்ந்து விழாவை காணலாம்.

இதேபோல் தமிழ் இலக்கியம், கலாசாரம், பண்டைய இலக்கியங்கள் குறித்து பல்வேறு தலைப்புகளில் ஆய்வரங்கங்கள் நடக்கின்றன.

இதற்காக கொடிசியா வளாகத்தில் தமிழ் புலவர்கள் பெயரில் 21 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அரங்கில் நடக்கும் ஆய்வரங்கில் 120 பேர் அமர முடியும். மாநாட்டின் ஐந்து நாள் நிகழ்ச்சிகளிலும் முதல்வர் கருணாநிதி பங்



கேற்கவுள்ளார். இதற்காக நேற்று நண்பகல் விமானம் மூலம் சென்னையில் இருந்து கருணாநிதி கோவை சென்றுள்ளார். விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

மாநாட்டை ஆரம்பித்து வைக்க குடியரசு தலை வர் பிரதிபா பட்டேல் இன்று மாலை டில்லியில் இருந்து விமானம் மூலம் கோவை வருகிறார். விமான நிலையத்தில் தமிழக ஆளுநர் பர் னாலா, முதல்வர் கருணாநிதி மற்றும் மத்திய, மாநில அமைச்சர்கள் வரவேற்கின்றனர். பின்னர் அரசு விருந்தினர் மாளிகையில் தங்குகிறார்.

செம்மொழி தமிழ் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பின்லாந்தை சேர்ந்த மொழி அறிஞர் அஸ்கோ பர்போலா, அமெரிக்க பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட் மற்றும் இலங்கையை சேர்ந்த தமிழறிஞரும் மாநாட்டு ஆய்வரங்க குழு உறுப்பினர்களில் ஒருவருமான பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி ஆகியோர் கோவை வந்துள்ளனர். மாநாட்டு ஆய்வரங்கில் பங்கேற்பதற்கு 50 நாடுகளை சேர்ந்த 1020 தமிழ் ஆர்வலர்கள் பதிவு செய்துள்ளனர். (6)

# தமிழை வழக்குமொழியாக அறிவிக்கக்கோரி மனு

உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்கு மொழியாக அறிவிக்கக்கோரி குடியரசுத் தலைவர் பிரதிபா பட்டேல் அ.தி.மு.க. மனு ஒன்றை நேற்றுகையளித்துள்ளது.

இது தொடர்பாக அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தா. பாண்டியன் ஆகியோர் கையெழுத்திட்ட மனு ஒன்றை அ.தி.மு.க எம்.பி.க்கள் தம்பித்துரை மற்றும் மைத்ரேயன் ஆகியோர் குடியரசுத் தலைவரிடம் நேற்று நேரலில் சென்று கையளித்தனர்.

மனுவில் பீகார், உத்தரபிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் உயர்நீதிமன்றத்தில் அவர்களது தாய் மொழியில் வாதாட அனுமதி உள்ளதுபோல தமிழகத்திலும் அனுமதி வழங்கப்பட்வேண்டும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. (6)

# இந்திய எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் மீண்டும் துப்பாக்கிச் சூடு

(ஜம்மு)

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இந்திய எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் மீண்டும் துப்பாக்கிச் சூடு நடத்தியதால் ஜம்முவில் பதற்றம் நிலவி வருகிறது.

ஜம்முவில் இருந்து 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஆர் எஸ் பூரா பகுதியில் இருக்கும் சர்வதேச எல்லைப்பகுதியில் அப்துலியா எல்லை இராணுவச்சாவடி மீது பாகிஸ்தானின் சுரக்பூர் இராணுவச்சாவடியிலிருந்து நேற்று அதிகாலை 4 மணியளவில் துப்பாக்கியால் சுட்டதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து எல்லைப்பாதுகாப்புப்




படையினரும் திருப்பிச் சுட்ட நிலையில் இந்திய எல்லைப்பகுதியில் குண்டுவெடிப்பு சம்பவமும் நிகழ்ந்ததாக தகவல்கள் தெரிவிக்கின் றன.

இதையடுத்து எல்லை பாதுகாப்புப் படை வீரர்களும் ரோந்துக் குழுவினரும் திருப்பிச் சுட்டனர். இரு தரப்பினரிடையேயும் சுமார் ஒன்றரை மணிநேரம் இந்தத் துப்பாக்கிச் சூடு நிகழ்ந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும் இந்த சம்பவத்தில் இந்திய தரப்பில் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னதாக நேற்றுமுன்தினம் மாச்சில் செக்டாரில் பாகிஸ்தான் இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டதில் இந்திய தரப்பில் இருவர் சம்பவஇடத்திலேயே உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தியா – பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை நடைபெறவுள்ள நிலையிலும் இஸ்லாமாபாத்தில் நடக்கவுள்ள சார்க் உள்துறை அமைச்சர்கள் மாநாட்டில் ப.சிதம்பரம் கலந்துகொள்ள வுள்ள சூழலிலும் இரண்டாவது நாளாக பாகிஸ்தான் இராணுவத்தினர் எல்லைப் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தியிருப்பது கவனத்திற்குரியதாக கருதப்படுகிறது. (6)

# செம்மொழி மாநாட்டை முன்னிட்டு நளினியை விடுதலை செய்ய வேண்டும்

## திருமாவளவன் கோரிக்கை

(சென்னை)

உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டையொட்டி 500 சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில், தண்டனைக் கைதிகள் பலர் விடுதலை செய்யப்படுவார்கள் என்னும் எதிர்ப்பார்ப்பு சிறைவாசிகளிடையே உருவாகியுள்ளது. அதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

இந்நிலையில் நீண்டகாலமாக விசாரணை இல்லாமல் செங்கல்பட்டு மற்றும் பூந்தமல்லி சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களையும் ஆயுள் காலத் தண்டனைக் காலத்தையும் தாண்டி சிறைப்பட்டிருக்கும் நளினியையும் கோவை குண்டுவெடிப்பு வழக்கில் சிறைப்படுத்தப்பட்டுள்ள தண்டனைக் கைதிகளான இஸ்லாமிய இளைஞர்களையும் விடுதலை செய்ய வேண்டுமென தமிழக அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

செம்மொழி மாநாட்டையொட்டி சென்னை பெருநகரத்தின் கடைகளில் விளம்பரப் பலகைகள் தமிழில் எழுதப்பட வேண்டுமென சென்னை பெருநகர மேயர் எடுத்துவரும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை எனவும் அந்த அறிவிப்புக்கு மதிப்பளித்து விளம்பரப் பலகைகள் முழுவதுமாக இன்னும் தமிழில் எழுதப்படவில்லை என்பது வேதனையளிப்பதாகவும் உள்ளது.

தமிழில் மாற்றி எழுதுபவர்களும் சொற்களை மாற்றாமல் பிறமொழிச் சொற்களை தமிழ் எழுத்துக்களாக மட்டுமே மாற்றியுள்ளனர். இது மேலும் அன்னைத் தமிழை அவமதிக்கும் செயலாகும். எனவே எழுத்து மாற்றமாக அமையாமல் சொற்கள் மாற்றமாக அமையும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.



அத்துடன் சென்னை பெருநகரத்தில் மட்டுமல்லாமல் தமிழகம் தழுவிய அளவில் இதனை நடைமுறைப்படுத்த தமிழக அரசு ஆவணசெய்யவேண்டும் என்றார். (6)



கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி, நடைபெறும் கலைவிழாவை தமிழக துணைமுதல்வர் ஸ்டாலின் மேளம் அடித்து ஆரம்பித்து வைப்பதையும் அருகில் கனிமொழி எம்.பி.நிற்பதையும் படத்தில் காணலாம்.

# செம்மொழி மாநாட்டு கொண்டாட்டம் கலைஞர் கருணாநிதி விளக்கவுரை

(சென்னை)

தமிழ் மொழிக்கு சிறப்புகள் சேர்க்கும் வகையில் தமிழ்ச் சமுதாயம் உலக அரங்கில் உன்னத நிலை பெறவேண்டும். இந்த மண்ணில் பிறக்கும் எல்லா உயிர்களுக்கும் சமதர்மம் கிடைக்க திருவள்ளுவர் சொன்ன மணி மொழியாம் தமிழ் மொழி வழி வகை செய்ய வேண்டும். இவ்வாறு நாளை கோவை நகரில் ஆரம்பமாகவுள்ள உலகத் தமிழ் செம்மொழி மாநாடுக்கான விளக்க உரையில் தமிழக மூதலமைச்சர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அந்த உரையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே செம் மொழி என்ற சிறப்பை சங்கை இலக்கியங் கள் மூலம் தமிழ் அடைந்திருந்தாலும் அதற்கு முறையான ஒப்புதல் 2004ஆம் ஆண்டில் தான் கிடைக்கப்பெற்றது.

இந்தப் பெருமையை கொண்டாடும் வகையிலேயே உலகத் தமிழ்ச்செம்மொழி மாநாடு நடத்தப்படுகிறது. இந்த மாநாட்டிற்கு உலகெங்கிலும் இருந்து தமிழறிஞர்கள் பலர் வருகை தரவுள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் 25 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்துறைத்தலைவராக விளங்கும் பேராசிரியர் முனைவர் ஜார்ஜ் ஹார்ட் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்.



அத்துடன் பின்லாந்து நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் அஸ்கோ பர்போலா எனும்பேறிஞர் உள் ளிட்ட 49 சர்வதேச நாடுகளைச் சேர்ந்த 536 தமிழறிஞர்கள் இந்த மாநாட்டில் பங்கு பற்றுகின்றனர்.

தமிழகம் உள்ளிட்ட இந்தியாவில் இருந்து மாத்திரம் ஏறத்தாழ 5ஆயிரம் அறிஞர்கள் பங்கு பெறுகின்றனர்.

இந்நிலையில் இந்தியக் குடியரசுத் தலைவி பிரதீபாபாட்டீல் நாளை காலை இந்த மாநாட்டை ஆரம்பித்து வைக்கவுள்ளார் என்று தனது உரையில் தெரிவித்துள்ளார். (6)

# ஐவரிகோஸ்ட் அணியை வீழ்த்திய பிரேசில் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது

## மைதானத்தில் காகா அடாவடி; களத்தைவிட்டு வெளியேற்றப்பட்டார்

(ஜோகனஸ்பேர்க்)

பிரேசில் அணி 3-1 என்ற கோல் கணக்கில் ஐவரிகோஸ்ட் அணியை வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

பிரேசில் அணியின் பேபியானோ இரண்டு கோல்கள் அடித்து அசத்தினார்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் 19ஆவது உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் ஜோகனஸ்பேர்க்கில் நடந்த ஜி பிரிவு லீக் போட்டியில் 5 முறை சம்பியனான பிரேசில் அணியை நம்பிக்க நட்சத்திரங்கள் நிறைந்த ஐவரிகோஸ்ட் அணி சந்தித்தது.

பிரேசில் அணிக்கு எல்லா விதத்திலும் ஐவரிகோஸ்ட் ஈடு செய்யக்கூடிய அணி என்பதால் போட்டி நடந்த சாக்கர்சிட்டி மைதானம் ரசிகர்களால் நிரம்பி வழிந்தது.

ஆரம்ப முதலே ஆட்டத்தில் அனல் பறந்தது. ஆட்டத்தின் 25ஆவது நிமிடத்தில் பிரேசில் அணியின் காகா, ரொபிங்கோ ஆகியோர் ஐவரிகோஸ்டின் கோல் பகுதிக்குள் பந்தை கடத்தி வந்து பேபியோனாவுக்கு பாஸ் கொடுத்தனர். பேபியோனா அதனைகோலாக மாற்றினார்.

சுமார் 9 மாதங்கள் கழித்து பிரேசில் அணிக்காக பேபியானோ அடித்த கோல் இதுவாகும். பயிற்சியாளர் துங்கா வைத்த நம்பிக்கையை இந்தக் கோலால் பேபியானோ காப்பாற்றிவிட்டார்.

இந்த கோல் மூலம் பிரசில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. தொடர்ந்து ஐவரிகோஸ்ட் கடும் போராட்டம் நடத்தியது. ஆட்டத்தின் 37ஆவது நிமிடத்தில் டின்டேன் அடித்த பந்து பிரேசில் தடுப்பாட்டக்காரர் பிலிப் மெலோவின் கையில் பட்டு சென்றது.

டின்டேன் பெனால்டி கேட்க நடுவர் அதனை ஏற்கவில்லை. இதனால் முதல் பாதி ஆட்டத்தில் பிரேசில் 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி 51ஆவது நிமிடத்தில் பேபியானோ மீண்டும் ஒரு கோல் அடித்தார்.

ஐவரிகேஸ்டின் 3 தடுப்பாட்டக்காரர்களுக்கு பேபியானோ தண்ணி காட்டியது சிறப்பானது. இதனால் பிரேசில் 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. இந்த கோல் அடிப்பதற்காக பேபியானே பந்தை கடத்தும் போது அவரது கையில் பந்துபட்டது. இதனை நடுவர் கவனிக்கவில்லை.




தொடர்ந்து 61ஆவது நிமிடத்தில் காகா கோல் கம்பங்களை நோக்கி அடித்தபந்தை ஐவரிகோஸ்ட் கோல் காப்பாளர் தடுத்து விட்டார்.

இதற்கு அடுத்த நிமிடத்தில் எலானோ பிரேசில் அணிக்காக 3ஆவது கோலை அடித்தார். காகா கொடுத்த பாஸ் லொனோ கோல் அடிக்க உதவியது.

ஆட்டத்தின் 79ஆவது நிமிடத்தில் ஐவரிகோட்ஸ் அணித்தலைவர் திடையர் டிரோக்பா தலையால் முட்டி ஒரு கோல் அடித்தார். இந்த கட்டத்தில் ஆட்டம் பரபரப்படைந்தது.

இரு அணி வீரர்களும் முரட்டு ஆட்டம் ஆடினர். 85ஆவது நிமிடத்தில் காகா ஒரு மஞ்சல் அட்டையைப் பெற்றார். இதற்கு அடுத்த 3ஆவது நிமிடத்தில் ஐவரிகோஸ்ட் வீரர் கீஸ்டாவின் மார்பில் காகா முழங்கையால் தாக்க ஐவரிகோஸ்ட் வீரர்கள் காகா வை அடிக்க பாய்ந்தனர்.

மைதானத்தில் இரு அணி வீரர்களுக்கும் அடிதடி உருவாகும் நிலை ஏற்பட்டது. இதனை அடுத்து பிரான்ஸ் நடுவர் ஸ்டிபானோ லேனி காகாவுக்கு சிவப்பு அட்டையைக் காட்டி களத்தை விட்டு வெளியேற்றினார்.

மீண்டும் ஆட்டம் தொடர்ந்து நடந்தது இறுதியில் பிரேசில் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தற்போது ஜி பிரிவில் பிரேசில் இரு வெற்றிகளுடன் 6 புள்ளிகள் பெற்ற இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. ஐவரிகோஸ்ட் இரு ஆட்டங்களிலும் ஒரு புள்ளி பெற்றது.

# போர்த்துகல் கோல் மழை பொழிந்தது: வழிவிட்டுக் கொடுத்தது வடகொரியா

(ஜோகனஸ்பேர்க்)

குரூப் ஒப் டெத்தில் இடம்பெற்றிருக்கும் போர்த்துகல் அணி 7-0 என்ற கோல் கணக்கில் வடகொரிய அணியை தோற்கடித்தது. இந்த வெற்றியால் போர்த்துகலின் இரண்டாவது சுற்று வாய்ப்பு பிரகாசமடைந்துள்ளது.




உலகக்கிண்ண கால்பந்துத் தொடரில் குரூப் ஒப் டெத்தாகக் கருதப்படும் ஜி பிரிவில் பிரேசில், போர்த்துகல் ஐவரிகோஸ்ட் அணிகளுடன் உலக தரவரிசைப் பட்டியலில் 115-வது இடத்தில் உள்ள வடகொரியாவும் உள்ளது. ஏற்கனவே ஜி பிரிவில் இருந்து பிரேசில்இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்று விட்டது. இந்தப் பிரிவில் இருந்து அடுத்த சுற்றுக்கு தகுதி பெறுவது யார்?என்பதில் ஐவரிகோஸ்ட் மற்றும் போர்த்துகல் அணிகளுக்கிடையே போட்டி நிலவியது.



இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் ஐவரிகோஸ்ட் பிரேசிலிடம் 3-1 என்று தோல்வி கண்டது. எனவே நேற்று நடந்த ஆட்டத்தில் போர்த்துகல் அதிக கோல் அடித்து வெற்றி பெற்றால் அடுத்த சுற்றுக்கு எளிதாக முன்னேற முடியும்.

எதிர்பார்த்தது போலவே ஆரம்பம் முதலே போர்த்துகல் தாக்குதலை தொடங்கியது. முதல்பாதியில் 29-வது நிமிடத்தில் ராஸ் மிராலஸ் போர்த்துகலுக்கான முதல் கோல் அடித்தார். இதன்பின்னர் வேறு கோல்கள் முதல் பாதியில் விழவில்லை.

பிற்பாதி ஆட்டத்தில்போர்த்துக்கல் அணி கோல் மழை பொழிந்தது.போர்த்துகல் வீரர்கள் சீமோ, அல்மீடா, லீட்சன், ரொனால் டோ தலா ஒரு கோலும் தியாகோ இரு கோல்களும் அடித்தனர். எதிர்த்து விளையாடி வடகொரியா விக்கித்துப்போனது. கடைசிவரை வடகொரியாவால் ஒரு கோல் கூட அடிக்க முடியாமல் போக ஆட்ட நேர இறுதியில் 0-7 என்ற கோல் கணக்கில் பரிதாபமாக தோல்வியடைந்தது.

இந்த வெற்றியையடுத்து போர்த்துகல் ஜி பிரிவில் 4 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. அடுத்த ஆட்டத்தில் போர்த்துகல் பிரேசிலுடன் மோதுகிறது. வட கொரியா, ஐவரிகோஸ்ட் அணியை சந்திக்கிறது. போர்த்துகல் பிரேசிலிடம் தோல்வியடையும் பட்சத்தில் வடகொரியாவுக்கு எதிராக, ஐவரி கோஸ்ட் குறைந்நது 8 கோல் அடித்து வெற்றிபெற வேண்டும். அப்போதுதான் ஐவரிகோஸ்ட் அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியும்.

இது சாத்தியமில்லை என்றே தோன்றுகின்றது. எனவே போர்த்துகல் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேற வடகொரியா வழி ஏற்படுத்தி கொடுத்து விட்டது. இந்தப் பிரிவில் ஐவரிகோஸ்ட் ஒரு புள்ளியும் வடகொரியா புள்ளிகள் எதுவும் பெறாமலும் உள்ளன.

# சகிட் அப்ரிடி அதிரடி சதம்

# பாகிஸ்தான் ஆறுதல் வெற்றி பங்களாதேஷ் அணி பரிதாபம்



(தம்புள்ள)

சகிட் அப்ரிடியின் அதிரடிச்சதத்தின் மூலம் பாகிஸ்தான் அணி 139 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி ஆறுதலடைந்தது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று தம்புள்ளவில் நடைபெற்ற 5ஆவது போட்டியில் பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகள் மோதின.

இரு அணிகளும் தொடரில் விளையாடிய முதல் இரண்டு போட்டிகளிலும் தோல்வியடைந்து இறுதிப் போட்டி வாய்ப்பை இழந்த நிலையில் ஆறுதல் வெற்றிக்காககளம் இறங்கின.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி அப்ரிடியின் அதிரடிச்சதத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 385 ஓட்டங்களை குவித்தது.

இதில் அணித்தலைவர் சகிட் அப்ரிடி 60 பந்துகளில் (17 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக) 124 ஓட்டங்களையும் இம்ரான் பர்காத் 66 ஓட்டங்களையும் சஹா ஷாயிப் ஹசன், உமல் அக்மல் ஆகியோர் தலா 50 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சபியுல் இஸ்லாம் 3 விக்கெட்டுக்களையும் சகிப் அல் ஹசன் 2 விக்கெட்டுக்களையும். அப்துல் ரஷாக் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 386 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 139 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இதில் ஜுனைட்டட் சிட்டிக் 114 பந்துகளில் (6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 97 ஓட்டங்களையும் இம் ரூல் ஹயில்ஸ் 66, தமீம் இக்பால் 34 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அக்தர், ஆசிப், அப்ரிடி, பார்கத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப் போட்டியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி போனஸ் புள்ளியுடன் 5 புள்ளிகளை பதிவு செய்தது எனினும் ஆறுதல் வெற்றியுடன் தொடரிலிருந்து விடைபெற்றது.

அத்துடன் பங்களாதேஷ் அணி தான் விளையாடிய 3 போட்டிகளிலும் தோல்வியடைந்து ஏமாற்றத்துடன் வெளியேறியது.

இதேவேளை தம்புள்ள ரன்கிரிய சர்வதேச மைதானத்தில் சர்வதேச ஒருநாள் போட்டியில் அதி கூடிய (385) ஓட்டங்களை எடுத்த அணி என்ற சாதனையை பாகிஸ்தான் நேற்று படைத்தது.

இதற்கு முன் கடந்த 18ஆம் திகதி பங்களாதேஷ் அணியுடனான போட்டியில் இலங்கை அணி 312 ஓட்டங்களை எடுத்து சாதனை படைத்திருந்தது.

## புலிகள் ஆயுதப் பயிற்சிகளைப்...

பிரிவினரும் எப்போதும் உஷாராக இருக்க வேண்டும்.

புலிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் கடற்படையினரின் பங்கு மிகவும் காத்திரமானது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் வேறு நாடுகளிடமிருந்து ஆயுதப் பயிற்சி பெற்று கடல் வழியாக இலங்கைக்கு வரக் கூடும்.

அவர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டிய முக்கிய பொறுப்பு கடற்படையினரைச் சேரும். இராணுவத்தினர் பொதுமக்களுடன் நல்லுறவைப் பேண வேண்டும்.

புலிகளின் உளவுத்துறையின் பலத்தைப் படையினர் உணர்ந்து கொள்கின்றமை அவசியம். ஏராளமான தியாகங்களுக்கும் பேரின்னல்களுக்கும் இடையில் படையினரால் நாட்டில் அமைதி நிலைநாட்டப்பட்டிருக்கின்றது.

அந்த அமைதியைத் தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்க வேண்டும். நாட்டை மீண்டும் இருள் அடர்ந்த யுகத்திற்குக் கொண்டு செல்லாமல் பாதுகாக்கும் முக்கிய பொறுப்புப் படையினருடையது.

கடந்த காலங்களில் முகாம்களில் கடமையாற்றும் படையினருக்குப் போதிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. அவருடைய கடமைகளைத் திறம்படச் செய்யக் கூடிய வகையில் அனைத்து வசதிகளும் உடனடியாகச் செய்து தரப்படும் என அவர் மேலும் கூறினார்.

இதேவேளை முல்லைத்தீவில் இடம்பெயர் மக்கள் பூரணமாக மீள்குடியேற்றப்பட்டதன் பின்னர் படை வீரர்களின் பிரசன்னம் வரையறுக்கப்படும் என முல்லைத்தீவுக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வா தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மாஅதிபர் மகிந்த பாலசூரியவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு முல்லைத்தீவில் 5,6 பொலிஸ் நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

## பாதுகாப்புச் செயலர் கோத்த...

திட்டங்களைச் சீர்குலைக்கும் நோக்கத்தில் ஜே.வி.பி.செயற்படுவதாகக் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

வட பகுதி மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் எவ்வித வேலைத் திட்டங்களையும் மேற்கொள்ளவில்லை.

யுத்தம் முடிபடைந்து 13 மாதங்கள் கடந்துள்ள போதிலும் யுத்தத்தினால் அழிவடைந்த மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குக் குறைந்தபட்ச தீர்வைக் கூட அரசாங்கம் வழங்கவில்லை.

ஜே.வி.பி. அனைத்து மக்களதும் கட்சியாகும். இதனால் மக்களின் பிரச்சினைகளில் தலையிடுவது கட்சியின் பொறுப்பாகும் என்றார்.

கோத்தபாய ராஜபக்ஷ தனது தொழிலை மீறி வெளியிட்டு வரும் கருத்துக்களினால் ஜே.வி.பியின் செயற்பாடுகளைத் தடுக்கவோ கட்சிக்கு அவப் பெயரை ஏற்படுத்தவோ முடியாது எனவும் விஜித்த ஹேரத் கூறியுள்ளார். (ச-5)

## நான்கு...

பொதுநலன் வழக்குத் தொடர்ந்தார்.

தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட டக்ளஸ் தேவானந்தா இலங்கை அமைச்சராக இந்தியாவுக்கு வந்துள்ளார். அவரைக் கைது செய்ய வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டு இருந்தது.

இந்த வழக்கைச் சென்னை உயர் நீதிமன்றம் விசாரித்து மத்திய அரசு பதில் அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. சென்னைப் பொலிஸ் தரப்பில் மத்திய அரசின் பதிலுக்கு காத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுத் தலைமை நீதிபதி இக்பால், நீதிபதி முருகேசன் ஆகியோர் அடங்கிய குழு முன்பு விசாரணைக்கு வந்தது.

மத்திய அரசு தரப்பில் கூடுதல் சொலிஸ்டர் ஜெனரல் ரவீந்திரன் ஆஜராகி இதில் பதில் அளிக்க 2 வார காலம் அவகாசம் வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் கேட்டு இருப்பதாகத் தெரிவித்தார்.

இதையடுத்து வழக்கு விசாரணையை 4 வாரத்திற்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனர். (ச-5)


விலை ரூ. 2000/=

நீதிக் கணக்கீடு

(புதிய பாடத் திட்டத்திற்கு அமைவானது)

வெளிவந்துவிட்டது

By: S.சிவதாஸ் [BBA(HRM.Spl)]

பின்வரும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்

பூபாலசிங்கம் புத்தகசாலை - கொழும்பு, யாழ்ப்பாணம்.
ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்.
அன்னை புத்தகசாலை - யாழ்ப்பாணம்.
Happy Book Centre - திருகோணமலை
வாணி புத்தக நிலையம் - வவுனியா

(c-503)



JAFFNA COLLEGE CEYLON

The Annual General Meeting of Jaffna College Alumni Association

The above meeting will be held on the 25th June 2010 at 9:30 am in **Ottley Hall**. Your presence is very much appreciated.

Annual General Meeting Agenda

- Prayer
- Minutes of the last Ex.Co meeting
- Secretary's Report
- Treasurer's Report
- Principal's Report
- Election of new Office bearers
- Any Other Business

**Hony.Secretary**

(C-370)



மக்லியோட் வைத்தியசாலை, இனுவில்

Mc Leod Hospital, Inuvil

ஸ்தாபிதம் - 1898 ஆம் ஆண்டு

அழைப்பிதழ்

Oral and Dental Wing of Mc Leod Hospital, Inuvil

வாய், பல் சிகிச்சைப் பகுதி, மக்லியோட் வைத்தியசாலை, இனுவில்

Air rotor Dental Unit போன்ற இயந்திரங்களால் அதி நவீன தொழில் நுணுக்கமயமாக்கப்பட்ட இனுவில் மக்லியோட் வைத்தியசாலையின் வாய், பல் சிகிச்சைப் பகுதி அருள்திரு. ஜோன் பார் அவர்களால் 23.06.2010, புதன்கிழமை மாலை 5 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டு, தென்னிந்தியத் திருச்சபை, யாழ். ஆதீனத்தின் பேராயர் அதி வணக்கத்துக்குரிய Dr. டானியேல் S. தியாகராஜா, Ph.D அவர்களால் அர்ப்பணம் செய்து வைக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன். தங்களுக்கு தனித் தனி அழைப்பிதழை அனுப்ப இயலாததையிட்டு மன்னிக்கவும். இந்த அழைப்பிதழை ஏற்று, இவ் விழாவுக்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

நன்றி; வணக்கம்

வைத்திய மேலதிகாரி
Medical Superintendent

021 222 7669, 077 6171451

(1744)



# மரண அறிவித்தல்

## நடராஜா திருநாவுக்கரசு

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா திருநாவுக்கரசு நேற்று 21.06.2010 திங்கட் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர்-மானிப்பாய் இந்துக் கல்லூரி), பாக்கியம் தம்பதிகளின் அருமைப் புதல்வரும்,

காலஞ்சென்ற உலகநாதன் மற்றும் சரவணபவன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், புவனேஸ்வரி, சந்திரபவானி ஆகியோரின் மைத்துனரும், பாலகிருஷ்ணன், புஷ்பராசா குருக்கள், ஸ்ரீஸ்கந்தராஜா ஐயர், காலஞ்சென்றவரான செல்வராசா மற்றும் யோகேஸ்வரக் குருக்கள், அன்னலட்சுமி, விக்னேஸ்வரக் குருக்கள் ஆகியோரின் சிறியதந்தையும்,

வாகீசன் (PEOPLES BANK-OCU-OUTSOURCE-Area Jaffna), நிசானி (முகாமைத்துவ உதவியாளர்-யாழ்.மாவட்டச் செயலகம்), ஹம்ஷா, லக்ஷன் ஆகியோரின் பெரிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 22.06.2010 செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

No.35, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
077 6171474,
021 222 4379

தகவல்;
ந.சரவணபவன் (தம்பி)
கலட்டி அம்மன் கோயில் கணக்குப்பிள்ளையும்
Vasantha Textails முகாமையாளரும்

(1749)



**Siat Academy – Jaffna Centre**
**Franchisee – MAG NET Academy (Pvt) Ltd.**

**SEMINAR ON ANIMATION**

அனிமேஷன் கருத்தரங்கு
இந்திய அனிமேஷன் வல்லுனர்களால
மீண்டும் யாழ்நகரில்
அனுமதி- இலவசம்
முற்கூட்டிய பதிவு அவசியம்
விரும்பிய திகதிகளில் பங்குபற்றலாம்.
( 24/6 or 25/06 or 26/06/2010 )
பதிவுகள் இன்றிலிருந்து எமது காரியாலயத்தில்:-
இல: 19, 3ம் மாடி,
தனராஜா கட்டடம்
(மக்கள் வங்கி ஸ்ரான்லி கிளை கட்டடமேல்மாடி)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**Siat Academy** யின் **Main Courses - Master Specialist Program** ல்

பதிவுசெய்பவர்களுக்கான தெரிவுப் பரீட்சை 27.06.2010 நடைபெறும்.

விசேடசித்தி பெறுபவர்களுக்கு கட்டணகழிவு வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு எமது காரியாலயத்திற்கு வருகைதரவும்

தொடர்புகட்கு:- 021 222 1864, 077 7497186

siat ACADEMY சியட் அக்கடமி

No. 19, 3rd Floor, N.Thanarajah Building, Stanley Road, Jaffna, Sri Lanka. Ph: 0094 - 213214756

(C-505)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.